புதன் | நவம்பர் 1

📖 மாலை வாசகம் – ஏசாயா 40:29–31

# நீங்கள் கர்த்தருடையவர்கள்

தேவரீர் சகலத்தையும் செய்ய வல்லவர் அவர் செய்ய நினைத்தது ஒரு போதும் தடைபடாது. அவர் முன்குறித்த காரியம் நிறைவேறும். தேவன் உங்களுடைய வாழ்க்கையில் ஒரு காரியத்தை நிர்ணெயித்திருக்க, உலக மனிதர்களோ அறிவில்லாமல் நல் ஆலோசனையை மறைத்து தங்களுக்கு தெரியாததையும், தங்கள் புத்திக்கு எட்டாததையும், தாங்கள் அறியாததையும் அலப்புகின்றார்கள். அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த் துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்து போய்விடாதிருங்கள். அவர் தம்முடையவர்களை தமது ஆலோசனையின்படி நடத்தி, முடிவிலே அவர்களை மகிமையில் ஏற்றுக் கொள்வார். துன்மார்க்கரின் வாழ்வை காண்கையில், மரணபரியந்தம் அவர்களுக்கு இடுக்கண்களில்லை. அவர்களுடைய பெலன் உறுதியாயிருக்கிறது. நரர் படும் வருத்தத்தில் அகப்படார்கள். மனுஷர் அடையும் உபாதியை அடையார்கள் போல செழித்து வளர்ந்திருக்கின்றார்கள். சன்மார்க்கர் தாங்கள் போட்டுக் கொண்ட நல்வழியிலே நடந்து, தங்கள் உத்தமத்திலே பெருமைபாராட்டுகின்றார்கள். ஆனால், கர்த்தருக்கு பயந்து அவர் வழியிலே நடக்கின்றவர்கள் உபத்திரவங்களையும், பாடுகளையும் அனுபவிக்கின்றார்கள் என்று தேவ பிள்ளைகள் பேசிக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, களைகள் வளர்வதற்கு மனிதர்கள் நிலங்களை பண்படுத்த வேண்டியதில்லை. களைகளானது எவ்விடத்திலும் செழித்து வளருவது போல, கோணலும் மாறுபாடான உலகத்திலே துன்மார்க்கர் களைகளை போல செழிக்கின்றார்கள். தங்களுக்கு நன்மையாக தோன்றும் வழியிலே நடக்கும் சன்மார்க்கரும், பெரும் விருட்சத்தைப்போல வளர்கின்றார்கள். ஆனால், அந்த விருட்சம் தானாய் நற்கனிகளை கொடுப்பதில்லை. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள் அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். அவர்கள் பண்படுத்தப்பட்ட நிலங்களிலே வளர்ந்து, தன் காலத்திலே தாராளமாய் நற்கனிகளை கொடுக்கும் இலையுதிராத மரங்களைப் போலிருப்பார்கள்.

**ரோமர் 10:11**

**அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் வெட்கப்படுவதில்லையென்று வேதம் சொல்லுகிறது.**

**ஜெபம்**: என்றென்றைக்கும் என் இருதயத்தின் கன்மலையும் என் பங்குமாயிருக்கிற தேவனே, நான் உயிர் வாழும் நாட்கள் எல்லாம், எப்போதும், உம்மையே அண்டிக்கொண்டிருக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# திருக்கரத்தால் தாங்கும் தேவன்

என்னை எதிர்க்கின்றவர்கள் வெகுவாய் பலத்திருக்கின்றார்கள். அவர்கள் கெடிதும் பயங்கரமுமானவர்கள். ஆனால், நானோ பெலனற்றவன் என்று மனமுடைந்து ஒடுங்கிப் போயிருக்கின்றவர்கள் தங்கள் பெலவீனத்திலே அறிக்கையிடுகின்றார்கள். பூமியிலே பலத்திருக்கின்ற பராக்கிரமன் கையிலிருந்து கொள்ளைப் பொருளை பறிக்க யாரால் கூடும்? அல்லது தங்கள் குற்றங்களினாலே நீதியாய் சிறைப்பட்டுப் போனவர்களை யாரால் விடுவிக்ககூடும்? இப்படியாக இந்த உலகத்திலே பலத்திருக்கின்ற சத்துருக்களின் செய்கைகளை கண்டு, மனிதர்கள் திகிலடைகின்றார்கள். உலக மனிதர்கள் மட்டுமல்ல, சில வேளைகளிலே தேவ பிள்ளைகளும் மனமடிவடைந்து போய்விடுகின்றார்கள். பராக்கிரமன் கையிலிருந்து கொள்ளைப் பொருளை பறிக்க மனிதர்களால் கூடாது. அல்லது தங்கள் குற்றங்களினாலே நீதியாய் சிறைப்பட்டுப் போனவர்களை விடுவிக்க மனிதனால் முடியாது. என்றாலும், இதோ, பராக்கிரமனால் சிறைப்படுத்தப்பட்டவர்களும் விடுவிக்கப்படுவார்கள் பலவந்தனால் கொள்ளையிடப்பட்டதும் விடுதலையாக்கப்படும் உன்னோடு வழக்காடு கிறவர்களோடே நான் வழக்காடி, உன் பிள்ளைகளை இரட்சித்துக் கொள்ளுவேன் என்று சேனைகளின் கர்த்தர் கூறியிருக்கின்றார். சர்வ வல்லமையுள்ள தேவன் முன்னிலையிலே, பார்வோன் என்னும் பராக்கிரமமுள்ள ஒரு ராஜா, தன் இருதயத்தை கடினப்படுத்தினான். பெலனற்றுப் போயிருந்த தேவனுடைய ஜனங்களை வெகுவாய் ஒடுக்கி, அவர்கள் சுமக்க கூடாத சுமையை அவர்கள்மேல் ஏற்றினான். ஆனால், இந்த உலகத்திலே பராக்கிரமமாயிருந்த அவன், தன் எல்லைகளை வரையறுப்பவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்பதையும், உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிற வனுக்கு அதைக்கொடுக்கிறார் என்பதையும் அறியாத மதியீனமாகவே இருந்தான். கர்த்தர் அவன் பெருமையை குலைத்து, அகந்தையை அடக்கினார். பார்வோன் மாத்திரமல்ல, இன்று தேவ பிள்ளைகள்கூட தங்கள் உபத்திரவத்தினாலே, உன்னதமானவர் ஆளுகை செய்கின்றார் என்பதையும், நாம் அவர் திருக்கரத்திலே இருக்கின்றோம் என்பதையும் மறந்து போய்விடுகின்றார்கள். பிரியமானவர்களே, இந்த உலகத் திலுள்ள பராக்கிரமனின் பெலன் ஒடுங்கிப் போகும் ஆனால், ஒருவனும் நம்மை நம்முடைய பிதாவாகிய தேவனின் திருக்கரத்திலிருந்து பறித்துக் கொள்ள முடியாது.

**யோவான் 10:28**

**அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது.**

**ஜெபம்**: உம்முடைய உள்ளங்கைகளில் என்னை வரைந்திருக்கின்ற தேவனே, சத்துரு வெள்ளம்போல புரண்டு வந்தாலும், நான் உம்முடைய பாதுகாப்பில் இருக்கின்றேன் என்பதை மறந்து போகதிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இம்மட்டும் வா, மிஞ்சி வராதே

கர்த்தர் செய்த உபகாரங்களை யாரால் எண்ணக்கூடும்? அவர் நம் வாழ்வில் செய்த நன்மைகளை யாரால் விவரிக்க கூடும்? ஆண்டவ ராகிய இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு. அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் என்று ஆண்டவராகிய இயேசுவின் சீஷனாகிய யோவான் கூறினார். கருப் பொருளாவது, அவருடைய நன்மை கள் எண்ணற்றது. அவற்றில் சில வற்றை நாம் நம் கண்களால் கண் டிருக்கிறோம், வேறு சிலவற்றை செவி களால் கேட்டிருக்கின்றோம், இன்னும் சிலவற்றை நாம் நம் வாழ்வில் அனு பவித்திருக்கின்றோம். அவைகள் கூட எண்ண முடியாதவைகள். ஆனாலும், ஆபத்துக் காலத்திலே தேவ பிள் ளைகள் அவற்றை மறந்து போய்விடுகின்றார்கள். வாழ்க்கைப் படகில் மோதும் அலைகளை காணும் போது, தங்கள் வாழ்வில் அலையலை யாய் வந்த எண்ணற்ற தேவ ஈவுகளை உணரமால், தங்கள் வாய்க ளினால், அவிசுவாசததிற்குரிய வார்த்தைகளை அறிக்யைிடுகின்றார் கள்.ஒரு சமயம், ஆண்டவர் இயேசுவின் சீஷர்கள் இருந்த படவு அலை களினால் மூடப்படத்தக்கதாய்க் கடலில் பெருங்காற்று உண்டாயிற்று. அவரோ நித்திரையாயிருந்தார். அப்பொழுது, அவருடைய சீஷர்கள் வந்து, அவரை எழுப்பி: ஆண்டவரே! எங்களை இரட்சியும், மடிந்து போகிறோம் என்றார்கள். ஆண்டவரிடத்தில் எண்ணற்ற அற்புதங்களை யும், அதிசயங்களையும் கண்ட அவர்கள், ஒரு கணப்பொழுதிலே யாவ ற்றையும் மறந்து மரண பயத்திற்குள்ளானார்கள். அப்பொழுது ஆண் டவர் இயேசு எழுந்து, காற்றையும் கடலையும் அதட்டினார். உடனே, மிகுந்த அமைதலுண்டாயிற்று. பிரியமானவர்களே, இம்மட்டும் வா, மிஞ்சி வராதே. என்று கடல் அலைகளின் பெருமை இங்கே அடங்கக்கடவது (யோபு 38:11) என்று அவைகளுக்கு எல்லையை வகுத்த சர்வ வல்லமையுள்ள தேவன் நம்மோடிருக்கின்றார். இரவுக்கு எல்லை விடியலாய் இருப்பது போலவும், மாரிகாலத்தின் எல்லை கோடையாக இருப்பது போலவும், நம் வாழ்வை நோக்கி, வரும் சவால்களுக்கும், உபத்திரவங்களுக்கும் ஒரு எல்லை உண்டு. அவை நம்மை மேற்கொள்ள முடியாது. ஏனெனில், உலகத்தை ஜெயித்தவர் நம்மோடு இருக்கின்றார். எனவே, திடன் கொள்ளுங்கள்!

**சங்கீதம் 74:17**

**பூமியின் எல்லைகளையெல்லாம் திட்டம்பண்ணினீர்; கோடை காலத்தையும் மாரி காலத்தையும் உண்டாக்கினீர்.**

**ஜெபம்:** பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதி தேவனே, துன்பங்கள், வேதனைகள் சூழும் நேரத்திலே, உம்முடைய வார்த்தையிலே நிலைத்திருக்க எனக்கு பெலன் தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

சனி | நவம்பர் 4

📖 மாலை வாசகம் – மத்தேயு 25:1–13

# அறிவுக்கெட்டாத தேவ அன்பு

தெருவிலே இரண்டு மனிதர்கள் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த வேளையிலே, அவ்விடத்தை கடந்து கொண்டிருந்த பொலிஸ் அதிகாரி, கலகம் எழும்பாதபடிக்கு, அவர்களை அணுகி, அவர்களுக்கு அறிவுரை கூறி, அமைதிப்படுத்த முயன்றார். ஆனால், அவர்களோ, அதற்கு செவி கொடுக்காமல், அசட்டை செய்தார்கள். வாக்குவாதம் பெருகிக் கொண்டு போகும் போது, நீங்கள் எப்போது சட்டம் குறித்த எல்லையை தாண்டுகின்றீர்களோ, அப்போது நான் உங்கள் இருவரையும் கைது செய்ய வேண்டும் என்று எச்சரிப்பை வழங்கினார். இவ்வண்ணமாக, இவ்வுலகிலே மனிதர்கள் பல எல்லைகளை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். தேவனாகிய கர்த்தர், சமுத்திர ஜலம் தன் கரையை விட்டு மீறாதபடிக்கு அதற்கு எல்லையைக் கட்டளையிட்டு, பூமியின் அஸ்திபாரங்களை நிலைப்படுத்தினார் (நீதி *8:29*). மனுஷஜாதியான சகல ஜனங்களையும் அவர் ஒரே இரத்தத்தினாலே தோன்றப்பண்ணி, பூமியின்மீதெங்கும் குடியிருக்கச்செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார் (அப்போஸ்தலர் *17:26*). கர்ப்பத்திலிருந்து உதிக்கிறதுபோல் சமுத்திரம் புரண்டுவ ந்தபோது, அதைக் கதவுகளால் அடைத்தவர் யார்? மேகத்தை அதற்கு வஸ்திரமாகவும், இருளை அதற்குப் புடவையாகவும் நான் உடுத்தி னபோதும், தான் அதற்கு எல்லையைக் குறித்து, அதற்குத் தாழ்ப்பாள்களையும் கதவுகளையும் போட்டார். (யோபு *38:8-11*) இவ்வண்ணமாவே தேவனானவர் எல்லாவற்றிற்கும் எல்லைகளை குறித்தார். ஆனால், பாவத்தில் விழுந்த மனிதகுலம், பாதாளத்திலே அழிந்து நித்திய நித்தியமாய் மாண்டு போகாமல், தம்முடைய சொந்த குமாரனாகிய இயேசுவை நமக்காக தந்து, தம்முடைய எல்லையற்ற அன்பை நம்மேல் பொழிந்திரு க்கின்றார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரம்? யாரால் அதை அளக்கக்கூடும்? அவ்வளவாய் அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையை தினமும் பொழிகின்றார். மேற்குக்கும் கிழக் குக்கும் உள்ள தூரத்தை அளவிட முடியுமோ? அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். பிரியமான வர்களே, தேவ அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அந்த அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்து கொள்ளும்படி தேவ அனுக்கிரகத்திற்காக வேண்டுதல் செய்யுங்கள்.

**எபேசியர் 3:19**

**அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல் லவர்களாகவும்,**

**ஜெபம்:** எல்லையில்லாத அன்பை என்மேல் பொழிகின்ற தேவனே, அந்த பேரன்பை நான் உணர்ந்து, வேதனையுண்டாக்கும் வழிகளை விட்டுவிலக எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அவர் கோபிப்பதற்கு தாமதிக்கின்றார்

ஒரு கிராமத்திலே வசித்து வந்த குடியானவனொருவன், செய்த குற்றத்தை அந்த கிராமத்தின் அதிகாரிகளும், மூப்பர்களும் அடங்கிய குழுவினர் விசாரணை செய்தார்கள். விசாரணை நடந்து கொண்டிருக்கும் போது, அந்த குற்றம் செய்த குடியானவனின், குரலின் தொனி ஏற்புடையதாக இருக்காததால், அந்த கிராமத்தின் அதிகாரிகள் மிகவும் கோபதுடன் அந்த குடியானவனை நோக்கி: நீ, செய்த குற்றத்தோடு இன்னும் நீ ஏன் உன்மேல் அதிக பாரத்தை ஏற்றிக் கொள்ளவேண்டும்? உன் தொனியை அடக்கிக் கொள், அல்லது அதற்குரிய தண்டனையை நீ இன்றே, மக்கள் முன்னிலையில் அடைந்து கொள்வாய் என்று எச்சரிகை விடுத்தார்கள். இவ்வண்ணமாக, மனிதர்கள் எஜமானனானவர்களுக்கு கொடுக்க வேண்டிய கனத்தில், சற்று குறைந்து போனாலும், சீக்கிரமாய் அவர்கள் கோபம் கொள்கின்றார்கள். ஏனெனில் மனிதர்களுடைய கோபனத்தின் எல்லை அவர்கள்வாழ்நாட்களைப்போல மிகவும் குறுகியதாக இருக்கின்றது. ஆனால், நம்முடைய கர்த்தரோ உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவருமாயிருக்கின்றார். நீங்கள் எத்தனை தடவைகள் அவருக்கு கொடுக்க வேண்டிய கனத்தை கொடுக்காமல், அவரசரவசரமாக கிரியைகளை நடப்பித்திருக்கின்றீர்கள் என்று ஆராய்ந்து பாருங்கள். அந்நாட்களிலே, தேவ ஜனங்கள், கண் ஊனமானதையும், நசல் பிடித்ததையும் மகத்துவமுள்ள தேவனுக்கு பலியிட்டார்கள். அப்படி செய்தாலும் பொல்லாப்பல்ல என்றார்கள். அதை நீ உன் அதிபதிக்குச் செலுத்து, அவன் உன்மேல் பிரியமாயிருப்பானோ? உன் முகத்தைப் பார்ப்பானோ என்று சேனைகளின் கர்த்தர் கேட்கிறார். அது போல, இன்றைய நாட்களிலும், பரிசுத்த அலங்காரம் இல்லாமல், தேவாவதி தேவனுடைய சமுகத்திலே கனவீனமானவைகளை நடப்பித்து, முகஸ்துதி செய்கின்றார்கள். ஆனாலும், தேவனோ, ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார். எனவே, எல்லையில்லாத இந்த கிருபையின் நாட்களை விருதாவாக்காமல், பரிசுத்த அலங்காரத்தோடு அவருக்கு நாம் ஆராதனை செலுத்தக்கடவோம். நாட்கள் சீக்கிரமாய் கடந்து போவதால், உணர்வுள்ள வாழ்க்கை வாழ்ந்து மகாகிருபையின் நாட்களை பிரயோஜனப் படுத்திக்கொள்ளுங்கள்.

**அப்போஸ்தலர் 17:30**

அறியாமையுள்ள காலங்களை தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.

**ஜெபம்:** என் அறியாமையின் நாட்களை காணாதவர்போல இருந்த தேவனே, நான் நிர்மூலமாகாதிருப்பது உம்முடைய கிருபை என்று அறிந்து, உணர்வுள்ள வாழ்க்கை வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேவன் போட்ட எல்லைகள்

உன்னதமான தேவன், காலத்திற்கும், இயற்கைக்கும் மட்டுமோ எல்லை வகுத்தார்? நீதிக்குத் அநீதிக்கும் எல்லைகள் இல்லையோ! பரிசுத் தத்திற்கும் அசுத்தத்திற்கும் எல்லைகள் இருக்கின்றதல்லவோ! ஆசீர் வாதத்திற்கும் சாபத்திற்கும் வரையறை உண்டல்லவோ! கடலுக்கு கட வாத எல்லையை வரைந்தவர், எல்லாவற்றையும் பூரணமாக சிருஷ் டித்து, அவை யாவற்றிற்கும் எல் லையை வைத்தார். அந்த எல்லை க்குள்ளே யாவும் நேர்த்தியாகவும் அழகாகவும் காணப்படுகின்றது. படைப்புக்கள் அதன் எல்லையை மீறும் போது அங்கே அலங்கோ லங்களும், பேரழிவுகளும் உண்டா கின்றது. ஆதியிலே தேவன், மனிதனை சிருஷ்டித்த போது, தம்முடைய சாயலாக அவனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிரு ஷ்டித்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார். கணவன் மனைவியாக அவர்களை இணைத்து, பரிசுத்த மெய்விவாகத்தை ஏற் படுத்தினார். புருஷனாகிய ஆதாம், தன் மனைவியாகிய ஏவாளோடு இசைந்திருந்தான். லோத்தின் நாட்களிலே, சோதோம் கொமோரா என் னும் பட்டணத்தார், விபசாரம்பண்ணி, காமவிகார நடக்கையால், அந்நிய மாம் சத்தைத் தொடர்ந்து, தேவன் ஆதியிலே போட்ட எல்லையை மீறியதால் நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்தார்கள் (யூதா 1:7, 2 பேதுரு 2:6-7). மேலும் உலக மனிதரிகளில் சிலர், திருமணத்திற்கு பல விதமான வரைவிலக்கணங்களை கொடுத்து, தேவன் ஆதியிலே போட்ட எல்லையை மீறி, தங்கள் சரீரங்களை அவமானத்திற்கும், அவலட் சணமாதை நடப்பிப்பதற்கும் ஒப்புக் கொடுத்திருக்கின்றார்கள் என்று பரிசுத்த வேதாகமகம் கூறுகின்றது. உலகம் தன் போக்கிற்கு போகலாம், உலக சட்டதிட்டங்களை மாற்றி, அவற்றில் கொஞ்சக் காலம் களிகூ றலாம் ஆனால் தேவனுடைய எல்லைகள் காலத்தோடு மாறிப் போவதில்லை. தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கென்றே அழைத்தார். ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டை பண்ணுகிறான். பிரியமானவர்களே, தேவன் போட்ட எல்லைக்குள்ளே சமாதானமும், மாறாத சந்தோஷமும் உண்டு. அந்த எல்லைகளை உடை த்துப் போடுகின்றவன் அதனால் வரும் பின்விளைவுகளை சந்திப்பான். நீங்களோ, தேவனுடைய எல்லைக்குள்ளே உங்கள் ஆத்துமாவை காத் துக் கொள்ளுங்கள். அவற்றை உங்கள் பிள்ளைகளுக்கும் கருத்தோடு கற்றுக் கொடுங்கள்.

**1 தெசலோனிக்கேயர் 4:7**

**தேவன் நம்மை அசுத்தத்தி ற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்.**

**ஜெபம்:** நன்மைகளை அருளும் அன்பின் பரம பிதாவே, இந்த உலகம் தரும் சுதந்திரத்திற்கு இடங் கொடாமல், எல்லாக் காவலோடும் என் இரு தயத்தைக் உம் வார்த்தையின்படி காத்துக்கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | நவம்பர் 7 | 📖 மாலை வாசகம் – ரோமர் 12:1 –2

# தேவ நியமங்கள் காலத்தோடு மாறுவதில்லை

பயிர்ச்செய்கையின் உபயோகத்திற்காக, ஊரிலுள்ள விவசாயிகள், மழைத் தண்ணீரை தேக்கி வைப்பதற்கு அணை கட்டி வைத்திருந்தார்கள். ஒரு நாள் தண்ணீரானது அணையை உடைத்துக் கொண்டு, வெள்ளமாக புரண்டோடி, அந்த ஊரிருள்ள பயிர்செய்கைகள் யாவற்றையும் பாழாக்கி போட்டது. உபயோகமுள்ள தண்ணீர் அதன் எல்லையை மீறும் போது, பாழக்கும் வெள்ளமாக மாறிவிட்டது. பாடசாலைக்கு செல்லும் பிள்ளைகளை, அந்த பாடசாலையின் மாணவர்கள் என்று அழைக்கின்றோம். ஒரு மாணவனானவன், அந்த பாடசாலையின் எல்லையை மீறி செயற் படும் போது, அவனை பாடசாலையிலிருந்து வெளியேற்றுகின்றார்கள். அவன் பிள்ளையாக இருக்கின்ற போதிலும், அவன் இப்போது அந்த பாடசாலையின் மாணவன் என்றுஅழைக்கப்படுவதில்லை.

**சங்கீதம் 128:1**

**கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான்.**

இவ்வண்ணமாகவே, பெற்றோர், புருஷன், மனைவி, பிள்ளைகள், வாலிபர்கள், விதைவைகள், வயோதிபர்கள், மூப்பர்கள், ஊழியர்கள், விசுவாசிகள்யாவருக்கும்பரிசுத்த வேதாகமம் எல்லை வகுத்திருக்கின்றது. உலகமானது நாகரீகம் அடையலாம். நடை உடை பாவனைகள் காலத்திற்கு காலம் மாறுபாடடையலாம். ஆனால், தேவனானவர் போட்ட எல்லைகள் மாறுவதில்லை. மனிதன் வெளிதோற்றத்தை பார்க்கின்றான். ஆனால் தேவனோ இருதயங்களை ஆராய்ந்தறிவதால், மனிதனுடைய சிந்தை இன்னதென்று அவர் அறிந்திருக்கின்றார். ஒரு புருஷனாவன், இந்த காலத்திற்கு ஏற்றபடி, தன் மனைவியை அன்பு செய்கின்றேன் என்று பூக்களாலும் பரிசுப்பொருட்களாலும் ஊருக்கு காண்பிக்கலாம். ஆனால், அவன் இருதயத்திலே, வேறு ஆசைகளை வைத்திருப்பானானால், அவன் அவளுடைய புருஷன் என்று அழைக்கப்படுவதற்குரிய தகு தியை இழந்து போகின்றான். இவ்வண்ணமாகவே, ஒவ்வொரு நபரும், அந்தந்த பருவத்திலே, கர்த்தருக்கு பயந்து, அவருடைய வார்த்தைகளின் படி செய்கின்றவனாக இருக்கும் போது, அவன் உபயோகமுள்ள தண்ணீரைப் போல இருப்பான். ஆனால், அவன் தன் நிலையை உண ராமல், காலத்திற்கேற்ப தன்னை மாற்றிக் கொள்ளும் போது, அவன் பாழாக்கும் வெள்ளம் போல மாறிவிடுகின்றான். பிரியமானவர்களே, இந்த உலகத்தின் வேஷம் கடந்து போகின்றது. எனவே, காலத்திற்கேற்ப, இந்த உலகத்தின் வேஷத்தை தரித்துக் கொள்ளாமல், கர்த்தர் நியமித்த ஒழுங்குக்கு கட்டுப்பட்டிருங்கள். கர்த்தர் உங்ளைக் குறித்து போட்ட எல்லையை மீறாமல், அதற்குள் கட்டுப்பட்டிருங்கள்.

**ஜெபம்:** காலங்களை அறிந்த சர்வ வல்லமையுள்ள தேவனே, உம்முடைய நியமங்கள் மாறாதவைகள். உலக போக்கிற்கு நான் என்னை ஒப்புக்கொடுத்து, உம்முடைய வழியை விட்டு விலகாதபடி என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

புதன் | நவம்பர் 8

📖 மாலை வாசகம் –1 பேதுரு 5:6–7

# நிறைவான இடத்திற்கு போக வேண்டும்

இன்றைய நாட்களிலே, தாங்கள் வளர்ந்து நிறைவடைவதைப் பற்றி எண்ணமற்றவர்களாக, நிறைவான இடங்களை தேடி ஓடுகின்றார்கள். ஒருவன் தான் செல்லுமிடத்திலே, தன் குறைவை உணர்ந்து, தான் வளர வேண்டும் என்று தன்னை கர்த்தரின் வழிக்கு ஒப்புக் கொடுப்பானானால், அதனால் அவனுக்கு பிரயோஜனம் உண்டாகும். ஏலி என்னும் ஆசாரியனுடைய நாட்களிலே, கர்த்தருடைய வார்த்தையானது அபூர்வமாயிருந்தது. ஏலியின் குமாரர்கள் கர்த்தருடைய ஆலயத்திலே இருந்தபோதும், அவர்கள் பேலியாளின் குமாரர்களாயிருந்து, மனுஷருக்கும், கர்த்தருக்கும் முன்பாக பொல்லாத காரியங்களை துணிகரமாக நடப்பித்து வந்தார்கள். அவர்கள் எப்படி துன்மார்க்கரானார்கள்? அவர்கள் கர்த்தருடய வார்த்தைக்கு கீழ்படிந்து, அவர் போட்ட எல்லைக்குள் வாழாமல், எல்லையை மீறியதால் துன்மார்க்கரானார்கள். அதனால், தேவன் தாமே சீலோவிலே இருந்த தன் ஆலயத்தின் ஸ்தானத்தை மாற்றவில்லை. மாறாக, அவர்கள் மத்தியிலே, பிள்ளையாண்டானாகிய சாமுவேலை வளர்த்து வந்தார். சாமுவேல், கீழ்ப்படிவுள்ளவனாக இருந்ததால், கர்த்தர் அவனோடு இருந்தார். கர்த்தர் அவனோடு இருந்ததால், அவன் தன்னை சூழ நடக்கும் துன்மார்க்கமான செயல்களை நோக்காமல், கர்த்தருக்கு பிரியமாய் இருப்பதிலே நோக் கமாயிருந்தான். இன்று சில தேவபிள்ளைகளும் கூட, கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கர்த்தர் குறித்த காலம் நிறைவேறும்வரை பொறுமையாய் இருக்க மனதில்லாமல், கர்த்தர் தங்களுக்கு போட்ட எல்லைகளை உடைத்துக் கொண்டு, கீழ்படியாமையின் பிள்ளைகளாக மாறிவிடுகின்றார்கள். பிரியமானவர்களே, அலைகள் மோதியடித்தாலும் மேற்கொள்ளாதபடிக்கும், அவைகள் இரைந்தாலும் கடவாதபடிக்கும், கடக்கக்கூடாத நித்திய பிரமாணமாக சமுத்திரத்தின் மணலை எல்லையாய் வைத்திருக்கிறவராகிய எனக்கு முன்பாக அதிராதிருப்பீர்களோ என்று கர்த்தர் தாம் தெரிந்து கொண்ட ஜனங்களுக்கு எச்சரிப்பின் வார்த்தையை அனுப்பினார். தேவ ஜனங்கள் என்று அழைக்கப்பட்ட அவர்கள், இப்போது, முரட்டாட்டமும் கலகமுமான ஜனங்கள் என்று கர்த்தரால் அழைக்கப்பட்டார்கள். நீங்களோ, அப்படியான நிலைக்கு தள்ளப்படாதபடிக்கு, கர்த்தருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். நீங்கள் கர்த்தரோடு இருந்தால், யார் உங்களை எதிர்த்து நிற்க முடியயும்?

**1 சாமுவேல் 2:26**

**சாமுவேல் என்னும் பிள்ளையாண்டானோ, பெரியவனாக வளர்ந்து, கர்த்தருக்கும் மனுஷருக்கும் பிரியமாக நடந்துகொண்டான்.**

**ஜெபம்**: அதினதின் காலத்தில் நேர்த்தியாகவும் செம்மையாகவும் காரியங்களை நடப்பிக்கின்ற தேவனே, நீர் முன்குறித்த நாள் வரைக்கும் நான் உமது பலத்த கைக்குள் அடங்கியிரு எனக்கு பொறுமை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்கள் வழிகளை மாற்றிக் கொள்ளுங்கள்

தம்பி, நாட்டின் பொருளாதார நிலைமைகள் நன்றாக இல்லை. இனி நிலைமைகள் எப்படியாக இருக்குமோ தெரியாது, எனவே, நீ வெளியூருக்கு சென்று, அங்கே உனக்கு ஏற்ற வேலையொன்றை தேடிக் கொள். இங்கே வேலை எடுப்பதும் மிகவும் சிரமமாயிருக்கின்தே என்று ஒரு தகப்பனானவர், தன்னுடைய மூத்த மகனானவரிடம் கூறினார். அதன்படி, அந்த மகனானவனும், வெளியூருக்குச் சென்று, பல கஷ்டங்கள் மத்தியிலும், பிரயாசப்பட்டான். சில ஆண்டுகள் கடந்து சென்ற பின் அவன் தன் பிரயாசத்தின் பலனோடு ஊருக்கு திரும்பினான். அவனுடைய நிலைமை நன்றாக உயர்ந்திருக்கின்றது என்று கண்டு கொண்ட அயலவனொருவன், தன்னுடைய மகனானவனை நோக்கி: நண்பர்களோடு சேர்ந்து உன் காலத்தைவீணடித்துத் திரிந்தது போதும், வெளியூருக்கு சென்று உழைத்து கொள் என்று அவனை அனுப்பி வைத்தான். ஆனால், அவன் தன் ஊரிலே எப்படி அடங்காதவனாக, காலத்தை விரயப்படுத்தி, தன் சோம்பேறித்தனத்தை மாற்றிக் கொள்ள மனதில்லாமல், அதிகாரங்களையும், அரசாங்கத்தையும் குறை கூறி, ஊதாரித்தனமாக வாழ்க்கை நடாத்துகின்றவனாக இருந்தானோ, அப்படியே வெளியூரிலும் வாழ்ந்து வந்தான். அந்த அயலவனின் மகனானவன், வெளியூருக்கு சென்றதால் அவனுக்கு வந்த நன்மை என்ன? அவன் வெளியூரிலே இருக்கின்றான் என்று பெயர் மாத்திரம் இருந்தது ஆனால், அவன் தன் சுபாவத்தை மாற்றிக் கொள்ள மனதற்றவனாகவே இருந்து வந்தான். முன்னர் வறுமையான நாட்டிலே வாழும் கீழ்படியாமையின் மகனாக இருந்தவன், இப்போது செல்வந்த நாட்டிலே வாழ்கின்ற கீழ்ப்படியாமையின் மகனாக காணப்பட்டான். மனிதர்கள் அவனை என்ன செய்கின்றாய் என்று கேட்கும் போது, பெரிதான செழிப்பான நாட்டிலே வாழ்கின்றேன் என்று கூறிக் கொள்வான். இதுபோலவே, தன்னை மாற்றிக் கொள்ள மனதில்லாமல், இடங்களை மாற்றிக் கொள்கின்றவனுடைய நிலைமையும் இருக்கின்றது. பிரியமானவர்களே, ஒருவன் வானத்திற்கு ஏறினாலும், தேவன் அங்கே இருக்கின்றார். அவருடைய வழி மாறிப் போவதில்லை. ஒருவன் பாதாளத்தில் தன் படுக்கை போட்டாலும், தேவன் அங்கேயும் அவனை காண்கின்றார். அவருடைய நியமங்கள் மாறாதவைகள். எனவே, முதலாவதாக நாம் நம்முடைய மனதை கர்த்தருடைய வழிக்கு திருப்பிக் கொள்வோமாக.

**சங்கீதம் 37:5**

உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.

**ஜெபம்:** என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் அறிந்த தேவனே, வேதனை உண்டாக்கும் வழியை நான் தெரிந்து கொள்ளாதபடிக்கு, எனக்கு நீர் உணர்வுள்ள இருதயத்தைத் தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்

வாழ்க்கையிலே வேண்டப்படாத துன்பங்களும், பிரச்சனைகளும். பிசாசின் சோதனைகளும் பெருகி கொண்டே இருக்கின்றது. இவற்றிற்கு முடிவில்லையா என்று ஒரு விசுவாசியானவன் தன் மேய்ப்பனானவரிடம் கூறிக் கொண்டான். அந்த விசுவாசியானவனை அநேக வருடங்கள் அறிந்திருந்த அந்த அனுபமிக்க மேய்ப்பரானவர், அவனை நோக்கி: மகனே, உன் குடும்பத்தை, உன் தகப்பனானவருடைய நாட்களிலிருந்து நான் அறிந்திருக்கின்றேன். நீ இப்போது ஒரு தகப்பனாக இருக்கின்றாய். ஆனால், உன் வாழ்க்கையிலே இன்னும் கீழ்படி வில்லாத தன்மைகள் இருக்கின்றதே. நீ உன்னை மாற்றிக் கொள்ளும்வரை நீ பிசாசுக்கு எதிர்த்து நிற்க முடியாது என்று கூறினார். ஆம் பிரியமான சகோதர சகோ தரிகளே, ஒருவன் முதலாவதாக, தேவ னுக்கு கீழ்படிவுள்ளவனாக வாழ வேண் டும். அதாவது, தேவனானவர், முகமு கமாய் வந்து ஒவ்வொரு நாளும், நீ இப் படி செய்ய வேண்டும் என்று சொல்லப் போவதில்லை. ஆனால், அவர் ஒழுங்குகளை நியமித்திருக்கின்றார். தம்முடைய வார்த்தைகளை நமக்கு கொடுத்திருக்கின்றார். ஞாயிறு தோறும் தேவ செய்தியை கொடுக்கின்றார். அவற்றின்படி நடப்பதற்கு நாம் நம்மை ஒப்புக் கொடுக்க வேண்டும். நாம் தேவனுக்கு கீழ்படிவு ள்ளவர்களாக நடந்து, பிசாசுக்கு எதிர்த்து நிற்கும் போது, அவன் உங் களை விட்டு ஓடிப் போவான். கீழ்படிவு இல்லாத இருதயமுடையவர்க ளிடத்திலே, பெருமை தங்கி இருக்கும். தேவன் பெருமையுள்ளவர்க ளுக்கு எதிர்த்து நிற்கிறார். பெருமையுள்ளவர்கள் பிசாசானவனை சார் ந்திருக்கின்றார்கள். அதனால், பிசாசானவன், அவர்களுக்கு பாராட்டுதல் கொடுக்கப் போவதில்லை. மாறாக, அவன் கொல்லவும் அழிக்கவு மேயன்றி வேறொன்றுக்கும் வாரான். கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று பரிசுத்த வேதாகமம் நமக்கு எச்சரிப்பை கொடுக்கின்றது. மனுஷர்கள் கீழ்படியாதவர்களாக காணப்படுவார்கள். இவர்கள் தேவனுடையவர்களல்ல. கீழ்படிவில்லாதவன் கிறிஸ்துவுக்கு பிரியமுள்ளவனாக இருக்க முடியாது. பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதல் மேலானது. எனவே, நாம் முதலாவதாக தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிய நமமை ஒப்புக் கொடுப்போமாக. தேவனுடைய சர்வாயுதவர்க் கத்தை தரித்தவர்களாக பிசாசானவனுக்கு பயப்படாமல் எதிர்த்து நிற்போம். அவன் உங்களைவிட்டு ஓடிப் போய்விடுவான்.

**யாக்கோபு 4:7**

ஆகையால், தேவனு க்குக் கீழ்ப்படிந்திருங் கள்; பிசாசுக்கு எதிர் த்து நில்லுங்கள், அப் பொழுது அவன் உங்க ளைவிட்டு ஓடிப்போ வான்.

**ஜெபம்**: தாழ்மையுள்ளவனுக்கு கிருபை அளிக்கும் தேவனே, உம்முடைய வார்த்தைக்கு அறிந்தோ அறியாமலோ எதிர்த்து நிற்காதபடிக்கு, மனப் பிரகாசமுள்ள கண்களை தந்து என்னை நடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# முன்னைய சந்ததியின் மேன்மைகள்

நீங்கள் உங்கள் பூர்வீகங்களையும், பூர்வ நாட்களையும் குறித்த மேன்மைகளை பற்றி உங்கள் பிள்ளைகளுக்கு பெருமை பாராட்டி கூறியதுண்டோ? சில மனிதர்கள் தங்கள் முன்னைய சந்ததிகளின் உலக மேன்மைகளை பற்றி தங்கள் பிள்ளைகளுக்கு, அவர்களுடைய சிறு பிராயத்திலேயே விபரித்து கூறுவதுண்டு. அதை கேட்கும் பிள்ளைகளும், தங்கள் அறியாமையின் வயதிலும், தங்கள் சந்ததியைக் குறித்து பெருமையாக தங்கள் நண்பர்களோடு பேசிக் கொள்வார்கள். சில சமயங்களிலே, இப்படிப்பட்ட தான, செயல்களை தேவபிள்ளைகள் மத்தியிலும் நீங்கள் பேசக் கேட்கலாம். இவைகளினாலே, பிள்ளைகள் மத்தியிலே பெருமையையும், சில வேளைகளிலே அகங்காரமும் வளர பெரியவர்களே காரணராகிவிடுகின்றார்கள். நாம் அப்படி இருக்கலாகாது. ஆனால், எங்கள் பிதாக்களுடைய நாட்களாகிய பூர்வநாட்களில் தேவன் நடப்பித்த கிரியைகளை நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு விபரித்துக் கூற வேண்டும். முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்ட மதியீனமான நாட்கள் உண்டு. அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். தேவனோ இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவராய் நம்மில் அன்புகூர்ந்த தம்முடைய மிகுந்த அன்பினாலே, அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டோம். முதலாவ தாக, அந்த இரட்சிப்பின் மேன்மையை உணர்ந்து, அதிலே நாம் மகி ழ்ந்து களிகூர வேண்டும். அந்த மேன்மையை உணராவிடில், எப்படி நாம் அவைகளை நம்முடைய பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் விபரித்து கூற முடியும்? இத்தகைய மகத்துவமுள்ள பதவியை தந்த தேவனுடைய மகத்தான செயல்களை, பிள்ளைகள் நம்மை நோக்கி பார்க்கும் வயதிலே, அவர்களோடு அனுதினமும் பேச வேண்டும். நண்பர்களோடு நாம்உட்கார்ந்திக்கும்போதுதேவனுடைய செயல்களை அறிவிக்க வேண்டும். நம்முடைய உறவினருக்கு நாம் பரலோக மேன்மைகளை எடுத்துக் கூற வேண்டும்.

**எபேசியர் 2:7**

கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார்.

**ஜெபம்**: என் புகலிடமான தேவனே, உம்முடைய மகத்துமுள்ள செயல்களை தியானித்து, உணர்வடைந்து, அவைகளை அடுத்த சந்ததிக்கும் அறிவிக்கும்படிக்கு நீர் உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்திச் செல்வீராக. இரட்ச கர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | நவம்பர் 12 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 9:1

# நெருக்கங்கள் சூழந்து கொள்ளும் போது...

ஒரு தகப்பனானவன், அவன் வசிக்கும் தேசத்திலே நிலவும் பொருளாதார நெருக்கடியினால், தன் வேலையை இழந்து போனான். அதனால் வந்த சில கஷ்டங்களை, அவனும் அவனுடைய குடும்பத்தாரும் உணர ஆரம்பித்தார்கள். அவனுடைய பிள்ளைகள் அவனை நோக்கி: அப்பா, ஏன் இப்படியான கஷ்டமான நாட்களை நாம் அனுபவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அப்பொழுது அவன் தன் பூர்வ நாட்களைக் குறித்தும், தேவன் தன் வாழ்வில் செய்த அதிசயமான செயல்களை குறித்து விபரித்து கூறினான். நான் கூப்பிட்ட நாளிலே எனக்கு மறுஉத்தரவு அருளி, என் ஆத் துமாவிலே பெலன்தந்து என்னைத் தைரியப்படுத்தின தேவன் இன்றும் ஜீவிக்கின்றார். நாம் அவரோடு அவரிலே தங்கி வாழும்படி அவர் நமக்கு கற்றுக் கொடுக்கின்றார். பஞ்ச நாட்களிலும் அவர் தம்முடையவர்களை போஷிக்க அறிந்திருக்கின்றார் என்று தன்னுடைய வாழ்விலே தேவன் தந்த வெற்றிகளை குறித்து தன் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்தான். பிரியமானவர்களே, நாமும் நம்முடைய வாழ்வில் உண்டான வெற்றிகளை குறித்து குடும்ப்த்திலும், சபையிலும் சாட்சி பகர்கின்றவர்களாக இருக்க வேண்டும். அதனால், நம்முடைய வாழ்விலே நன்றி பெருக வேண்டும். அன்று என் வாழ்வில் அற்புத செயல்களை செய்த தேவன், என் முதிர்வ யதிலும், என் பெலன் ஒடுங்கிப் போகும் நேரத்திலும் என்னை கைவிட மாட்டார் என்ற விசுவாச அறிக்கை உறுதியாக இருக்க வேண்டும். “கர்த்தர் உயர்ந்தவராயிருந்தும், தாழ்மையுள்ளவனை நோக்கிப் பார்க்கிறார் மேட்டிமையானவனையோ தூரத்திலிருந்து அறிகிறார். நான் துன்பத்தின் நடுவில் நடந்தாலும் நீர் என்னை உயிர்ப்பிப்பீர் என் சத்துருக்களின் கோபத்துக்கு விரோதமாக உமது கையை நீட்டுவீர் உமது வலதுகரம் என்னை இரட்சிக்கும். கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது. உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாதிருப்பீராக” என்று ஒரு தேவபக்தன் பாடினான். அந்த பாடல் நம்முடைய நாவிலும் தொனிக்க வேண்டும். எனவே, சூழ்நிலைகளை கண்டு மனம் சோர்ந்து போகாம லும், இன்னுமொரு பெரிதான அற்புத செயலை உங்கள் வாழ்வில் நடத்தி முடிக்க இருக்கும் கைவிடாத கன்மலையாகிய கர்த்தருடைய நேரத்திற்காக பொறுமையோடு காத்திருங்கள். நெருக்கத்திலிருந்து கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன், கர்த்தர் என்னைக் கேட்டருளி விசாலத்திலே வைத்தார் என்று மறுபடியும் சொல்லும் நாள் சமீபமாயிக்கின்றது.

**சங்கீதம் 138:8**

கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்

**ஜெபம்**: உமது கரத்தின் கிரியைகளை நெகிழவிடாத தேவனே, நெருக்கடியான நாட்களிலே நான் சோர்ந்து போகாதபடிக்கு, நீர் தந்த வெற்றிகளை அறிக்கை செய்து உமக்காக காத்திருக்க பொறுமையைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | நவம்பர் 13 | 📖 மாலை வாசகம் – சங்கீதம் 37:3 – 4

# பயம் சூழ்ந்து கொள்ளும் போது...

இன்றைய நாளை நான் எப்படியோ கடந்து விட்டேன். நாளை நாளைக்கு எப்படி முகங் கொடுப்பேன்? என்று ஒரு விசுவாசியானவன், தன் படுக்கையிலிருந்து சிந்தித்துக் கொண்டிருந்தான். காலையிலே வழித்தெழும் போது, அவன் தேவனுடைய புதுக் கிருபையை தன் இருதயத்திலே உணர்ந்து கொண்டான். சூழ்நிலைகள் இன்னும் மாறிப் போகவில்லை, ஆனால், மனதிலே அவனை அறியாத ஒரு நம்பிக்கை உண்டாகியிருப்பதை உணர்ந்து கொண்டான். அந்த நம்பிக்கை புதிதாக தோன்றிய நம்பிக்கை அல்ல. அது அவன் உள்ளத்தில் எப்போதும் இருந்தது. ஆனால், அதை உணரமுடியாதபடிக்கு அவன் தன் வாழ்வில் ஏற்பட்டிருக்கும் துன்பங்களை நோக்கிப் பார்த்திருந்தான். அதனால், அவன் மனக் கண்கள் மங்கலாக இருந்தது. ஆனால், கர்த்தரோ, அவன் மனக் கண்களை மறுபடியும் பிரகாசிப்பித்தார். ஆம், தேவ பிள்ளைகளுடைய வாழ்விலே துன்பங்கள் சூழ்ந்துகொள்ளும் போது, சில வேளைகளிலே, வேதனை, வெட்கம், அவமானம், பயம் அவர்கள் மனதில் குடி கொண்டு விடுகின்றது. அந்த வேளையிலே அவர்கள் தாங்கள் யார் என்பதையும், தங்களை அழைத்த தேவன் இன்னார் என்பதையும் சொற்ப காலம் மறந்து போய்விடுகின்றார்கள். அவர்கள் மனதில் தோன்றிய உலக கவலையும், மனிதர்களைக் குறித்த பயமும், கர்த்தர் தங்கள் வாழ்விலே அணையாத தீபமாக இருப்பதை அவர்கள் உணரமுடியாமல் தடுத்து விடுகின்றது. தம்முடைய பிள்ளை களின் நிலைமையை நன்றாக அறிந்த பரம பிதா, அவர்களை பாதி வழியிலே விட்டுவிடமாட்டார். தம் பிள்ளைகளின் மனதிலே உண்டான பயத்தை புறம்பே தள்ளி, அவர்களை பயங்கரமான குழியிலும் உளையான சேற்றிலுமிருந்து தூக்கியெடுத்து, அவர்கள் கால்களைக் கன்மலையின்மேல் நிறுத்தி, அவர்கள் அடிகளை உறுதிப்படுத்தி, தேவனைத் துதிக்கும் புதுப்பாட்டை அவர்கள் வாயிலே கொடுக்கின்றார். அநேகர் அதைக் கண்டு, பயந்து, கர்த்தரை நம்புவார்கள். பிரியமானவர்களே, உங்களை எதிர்க்கின்ற மனிதர்களையும், சூழ்நிலைகளையும் குறித்த பயம் உங்களது மனதை ஆட்கொள்ளும் போது, கர்த்தருடைய கிருபை என்றுமுள்ளதென்று அறிக்கையிடுங்கள். நெருக்கத்தில் நாளிலே நீங்கள் கர்த்தரை நோக்கி அப்படியாக அறிக்கை செய்யும் போது, கர்த்தர் அதைக் கேட்டு, உங்கள் சூழ்நிலைகளை மாற்றி உங்களை விசாலத்திலே வைப்பார்.

**சங்கீதம் 118:4**

அவர் கிருபை என்றுமுள்ளதென்று, கர்த்தருக்குப் பயப்படுகிறவர்கள் சொல்வார்களாக.

**ஜெபம்:** என் பெலனும், என் கீதமும், எனக்கு இரட்சிப்புமான தேவனே, என் நெருக்கடி வேளையிலே என் சத்தத்தை கேட்டு, என் பயத்தை நீக்கி, என் வீட்டிலே இரட்சிப்பின் கெம்பீர சத்தத்தை தொனிக்கச் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | நவம்பர் 14 — 📖 மாலை வாசகம் – யாக்கோபு 4:8

# இன்றைய நாளை எப்படி சமாளிப்பது?

நீ துன்பத்தின் மத்தியிலே இருக்கின்றபடியால், உன் பெலவீனத்திலே நீ நினைத்தவைகளையே பேசுகின்றயாய். நேற்றய நாளை நீ கடந்து வரவில்லையா? உன்னை உருவாக்கி தேவன் உன்னோடிருந்து உன்னை நடத்திவந்தாரே.இன்றை நாளை நீ சமாளிக்கவில்லை, உன்னை அழைத்த தேவன் உன்னோடு கூட இருக்கின்றார். நாளைய நாளைக் குறித்து கவலையடையாதே, வாக்குமாறாத தேவன் உன்னோடிருந்து உன்னை வழிநடத்துவார் என்று மனமடிவடைந்திருக்கும், ஒரு மனிதனானவனை அவனுடைய மேய்ப்பரானவர் ஆறுதல் படுத்தினார். நெருக்கத்தின் நாட்களிலே எலியாவின் தேவன் எங்கே என்று மனிதர்கள் சிலவேளைகளிலே கேட்டு கொள்கின்றார்கள். எலியா தன் நெருக்கத்தின் நாளிலே உண்டான மரண பயத்தினால் ஓடி ஒளிந்து கொண்டான். அப்பொழுது கர்த்தர், எலியாவே நீ எங்கே இருக்கின்றாய் என்று கேட்டார். பிரியமான சகோதர சகோதரிகளே, “இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன். உங்களை திக்கற்றவராக விடேன்” என்று கூறிய கர்த்தர் உண்மையுள்ளவர். அவர் உங்களை கைவிடமாட்டார். அவர் உங்களை மறந்துபோகவுமாட்டார். அவர் உங்களை விட்டு விலக மாட்டார். ஆனால், நீங்கள் கர்த்தரைவிட்டு ஓடி ஒளிந்து கொள்ளாதிருங்கள். தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். ஒரு வேளை, தகப்பனும் தாயும் தங்கள் பிள்ளைகளை மறந்து போனா லும் கர்த்தர் தம்முடையவர்களை தம்மோடு சேர்த்துக்கொள்ளுவார். தீங்கு நாளில் அவர் அவர்களை தம்முடைய கூடாரத்தில் மறைத்து, அவர்களை தமது கூடார மறைவிலே ஒளித்துவைத்து, அவர்களைக் கன்மலையின்மேல் உயர்த்துவார். எனவே, ஆத்துமா சோர்ந்து போகும் போது, விக்கினங்கள் கடந்துபோகுமட்டும் அவருடைய செட்டைகளின் நிழலிலே சேருங்கள். எனக்காக யாவையும் செய்து முடிக்கப்போகிற தேவனாகிய உன்னதமான தேவனை நோக்கிக் கூப்பிடுவேன் என்று தேவ பக்தன் தன் துன்பத்திலே அறிக்கை செய்தது போல, நீங்களும் அறிக்கை செய்யுங்கள். அப்பொழுது, தேவனானவர், பரலோகத்திலிருந்து ஒத்தாசை அனுப்பி, உங்களை இரட்சிப்பார். தேவன் தமது கிருபையையும் தமது சத்தியத்தையும் அனுப்புவார். நாம் சேவிக்கின்ற தேவன் சதா காலமும் நமது தேவனாக இருந்து நம்முடைய மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.

**சங்கீதம் 48:14**

**இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார்.**

**ஜெபம்:** வாக்கு மாறாத தேவனே, என் கைகளைச் சுத்திகரித்துக் கொண்டு, இருமனமுள்ளவனாக வாழாமல், என் இருதயத்தை பரிசுத்தமாக்கும்படிக்கு உம்மண்டையிலே தாழ்மையோடு சேர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – 1 தீமோ 6:6 –10

# எந்தன் வாழ்வின் மேன்மை

சிலர் இரதங்களைக்குறித்தும், சிலர் குதிரைகளைக்குறித்தும் மேன்மை பாராட்டுகிறார்கள் நாங்களோ எங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைக்குறித்தே மேன்மைபாராட்டுவோம் என்று தேவனை சார்ந்து வாழ்ந்த ராஜாக்கள், தங்கள் தேசத்திலே படைப்பலம் அதிமாக இருந்த நாட்களிலும் உண்மையாக அறிக்கையிட்டார்கள். ஏனெனில், எந்த ராஜாவும் தன் சேனையின் மிகுதியால் இரட்சிக்கப்படான் சவுரியவானும் தன் பலத்தின் மிகுதியால் தப்பான். இரட்சிக்கிறதற்குக் குதிரை விருதா அது தன் மிகுந்த வீரியத்தால் தப்புவியாது என்பதை அவர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். இன்றை நாளிலே, நாம் நம்முடைய நிலைமையை ஆராய்ந்து பாரக்க வேண்டும். மேற்கூறிய வசனத்தின் உண்மையான கருப்பொருளை அறியாமல், அதை நம் வாழ்வில் அறிக்கையிடுவது, நமக்கு இலகுவாக இருக்கலாம். ஏனெனில், நம்மிடம் இரதங்களும், குதிரைகளும் இல்லை. உங்களுடைய வாழ்க்கையின் ஆதாரம் என்ன? உங்கள் வாழ்விலும் எவைகளை மேன்மைபடுத்தி வாழ்ந்து வந்தீர்கள்? உங்கள் பிள்ளைகளுக்கு எவைகளை கற்றுக் கொடுத்திருக்கின்றீர்கள்? இன்று சில விசுவாசிகள், கல்வி, வேலை, அந்தஸ்து, ஆஸ்தியை பெருக்குதல் இவைகளையே தங்கள் வாழ்க்கையின் முதன்மையானவைகளாக்கிக் கொண்டு, அவைகளையே தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கின்றார்கள். பணமும், பொருளும் எந்த மனிதனையும் இரட்சிக்கவோ, அவன் ஆத்துமாவை மரண கண்ணியிலிருந்து விடுவிக்கவோ முடியாது. அவைகளால் உண்டாகும் வசதிகள், மனதில் நிறைவை கொடுப்பதில்லை. அவைகள் உங்கள் வாழ்வில் பெருகுவதால், மனச் சமாதானத்தை தருவதுமில்லை. அவைகளை தங்கள் வாழ்வில் மேன்மைப் படுத்துகின்றவர்கள், சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுந்து விடுகின்றார்கள் என்று பரிசுத்த வேதாகமம் கூறிகின்றது. எனவே, பணத்தையும் பொருளையும் மேன்மைப் படுத்தாமல். கர்த்தரை நம்பி அவரை உங்கள் வாழ்வில் மேன்மைப் படுத்துங்கள். தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்களின் ஆத்துமாக்களை மரணத்திற்கு விலக்கி விடுவிக்கவும் பஞ்சத்தில் அவர்களை உயிரோடே காக்கவும், கர்த்தருடைய கண் அவர்கள்மேல் நோக்கமாயிருக்கிறது.

**சங்கீதம் 33:20**

**நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது; அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடகமுமானவர்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, நான் உம்மை என் தெய்வமாகக் கொண்டதினாலும், நீர் என்னை உமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்டபடியாலும் நான் பாக்கியம் பெற்றேன். இந்த மகா பெரிய சிலாக்கியத்திற்காக நன்றி. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – ஆபகூக் 3:16 – 18

# இக்கட்டு நாட்கள் சூழ்ந்து கொள்ளும் போது...

**ரோமர் 8:37**

இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே.

ஆபகூக் என்னும் தேவனுடைய தீர்க்கதரிசியானவன், கெடிதும் பயங்கரமுமான அந்நிய படைகள் தேசத்தை ஆக்கிரமிக்கும் நாட்கள் வரும் என்றும், இனி வரவிருக்கும் பயங்கரங்களையும் அறிந்த போது, "அத்திமரம் துளிர்விடாமற்போனாலும், திராட்சச்செடிகளில் பழம் உண்டாகாமற்போனாலும், ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமற்போனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப்போனாலும், தொழுவத்திலே மாடு இல்லாமற்போனாலும், நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன், என் இரட்சிப்பின் தேவனுக்குள் களிகூருவேன்" என்று அறிக்கை செய்தான். அந்நாட்களிலே, தேசத்தின் பொருளாதாரம் அத்திமரம், திராட்சை செடி, ஒலிவமரம், தானியங்கள், ஆட்டுமந்தை, மாடுகள் போன்றவற்றின் பெருக்கத்தினால் அளவிடப்பட்டது. இவைகள் யாவும் தேசத்திலே அற்றுப்போகும் போது, அந்த தேசத்திலே பெரிதான பஞ்சம் உண்டாகும். அது மட்டுமல்லாமல், கெடிதும் பயங்கரமுமாக அந்நிய படைகள் தேசத்தை ஆக்கிரமிக்கும் போது, தேசத்தை கொள்ளையடித்து, மிகுதியானவைகளை சுட்டெரித்து, ஜனங்கள சிறைப்பிடித்துக் கொண்டு போய்விடுவார்கள். இந்த நிலைமையை தீர்க்கதரிசியானவன் இன்னும் சந்திக்கவில்லை. இப்படி நடக்கும் என்று அவன் அறிந்த போது, "என் குடல் குழம்பிற்று. அந்தச் சத்தத்துக்கு என் உதடுகள் துடித்தது. என் எலும்புகளில் உக்கல் உண்டாயிற்று. என் நிலையிலே நடுங்கினேன் ஆனாலும் எங்களை எதிர்க்கும் ஜனங்கள் வரும்போது, இக்கட்டுநாளிலே நான் இளைப்பாறுதல் அடைவேன்." என்று விசுவாச அறிக்கை செய்தான். இந்நாட்களிலே, எங்கள் மத்தியில் வாழும் சிலர், சில தேசங்களிலே இப்படியான சூழ்நிலைகளை சந்தித்திருக்கின்றார்கள். ஆனால், அநேகருக்கு இதன் தாக்கங்கள் இன்னதென்று தெரியாது. அப்படியான சூழ்நிலை வந்தால் நாங்கள் என்ன செய்வோம் என்று பதறுகின்றவர்கள் பலர். மனிதபெலத்தால், இவைகளை கடந்து கர்த்தருக்குள் மகிழ்சியாக இருக்க முடியாது. ஆனால், தேவன் தரும் பெலத்தினால் நாங்கள் இவைகளையும் கடந்து செல்வோம் என்ற விசுவாச அறிக்கை எங்களில் இருக்க வேண்டும். வருங்காலத்திலே எந்நிலையானாலும், கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்ற நிச்சயம் நம்மில் வளர வேண்டும்.

**ஜெபம்**: என்னோடு இருக்கும் தேவனே, உயர்வானாலும், தாழ்வானாலும், மரணமானாலும், ஜீவனானாலும், நீர் ஒருபோதும் என்னைக் கைவிட மாட்டீர் என்ற நம்பிக்கை என்னில் நாள்தோறும் பெருகச் செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# துயரத்திலே சோர்ந்து போகாதிருங்கள்

வாழ்க்கையிலே உண்டாயிருக்கும் தீராத தொல்லைகளினால், மனம் நொந்து ஒடுங்கிப் போயிருக்கும் சகோதரனே, சகோதரியே, உங்கள் கண்ணீரை அவர் தம்முடைய துருத்தியில் வைத்து, அவைகளை தம் கணக்கில் வைத்திருக்கின்றார். "நான் பெலனற்றுப்போய், மிகவும் நொறுக்கப்பட்டேன் என் இருதயத்தின் கொந்தளிப்பினால் கதறுகிறேன். ஆண்டவரே, என் ஏங்கலெல்லாம் உமக்கு முன்பாக இருக்கிறது என் தவிப்பு உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் உள்ளம் குழம்பி அலைகிறது. என் பெலன் என்னை விட்டு விலகி, என் கண்களின் ஒளி முதலாய் இல்லாமற் போயிற்று. என் சிநேகிதரும் என் தோழரும் என் வாதையைக் கண்டு விலகுகிறார்கள் என் இனத்தாரும் தூரத்திலே நிற்கிறார்கள்." "கர்த்தாவே, உமக்குக் காத்திருக்கிறேன் என் தேவனாகிய ஆண்டவரே, நீர் மறுஉத்தரவு கொடுப்பீர்." (*சங்கீதம் 38:8-11, 15*) என்று ஒரு தேவபக்தன் தன் துன்பத்தின் நாட்களிலே பாடியிருக்கின்றார். நித்திய கன மகிமைக்கென்று அழைப்பை பெற்றவர்களே, சோர்ந்து போகாதிருங்கள். இரவுக்கு எல்லை விடியலாயிருப்பது போல, உங்கள் துக்கங்களுக்கும் எல்லையை வைக்கின்றார். முடிவிலே எல்லையில்லாத நித்திய சமாதானமாக வாழ்க்கை கட்டளையிடுவார். உங்கள்விசுவாச அறிக்கையிலிருந்து தளர்ந்து போகாதிருங்கள். உங்கள் மனவேதனையிலே நீங்கள் தேவனை தூஷித்து, முற்றாகஅழிந்துபோக வேண்டும் என்பதையே உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் விரும்புகின்றான். அவனுடைய தந்திரங்கள் உங்களில் நிறைவேற இடங் கொடுக்காதிருங்கள். "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான். விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக் காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக. அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென். (*1 பேதுரு 5:8-11*)

**1 பேதுரு 5:10**

கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக;

**ஜெபம்:** நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கும் தேவனே, என் துக்கத்திலே நான் மடிந்து போகாதபடிக்கு என்னை காத்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உங்கள் பழைய பெயர்கள் என்ன?

தன் சகோதரர்களால், புறக்கணிக்கப்பட்ட வாலிபனாகிய யோசேப்பு, அடிமையாக விற்கப்பட்டு, அந்நிய தேசத்திலே போத்திபார் என்னும் எகிப்தின் அதிகாரியின் வீட்டிலே வேலை செய்து வந்தான். போத்திபாரின் மனைவியானவள், தன் கணவன் வீட்டில் இல்லாத சமயத்திலே, தன்னுடைய இச்சைகளுக்கு யோசேப்பு உடன்படாததை கண்டபோது, அவன் தன்னோடு தகாதவிதமாக நடந்து கொண்டான் என்று பொய் குற்றம் சாட்டினாள், அதனால் அவன் அரச சிறையிலே போடப்பட்டான். அவனுடைய சகோதரர் அவனை "சொற்பனக்காரன்" என்றொரு பெயரை வைத்திருந்தார்கள். அவனை விலைகொடுத்து வாங்கிய வியாபாரிகள், அவனை "அடிமை" என்று அழைத்தார்கள். போத்திபாரின் வீட்டார், அவனை "துரோகி" என்று அழைத்திருப்பார்கள். எகிப்தின் சட்டப்படி அவன் "சிறைக்கைதி" என்று அழைக்கப்பட்டான். ஆனாலும், அவனோ, கர்த்தருடைய நேரத்திற்காக காத்திருந்தான். கர்த்தருடைய முன்குறித்த நேரத்திலே, அவர் அவனை சிறையிலிருந்து எடுத்து, எகிப்தின் அதிகாரி என்று பெயரை கொடுத்து, அவனை குற்றப்படுத்தின யாவருக்கும் மேலாக அவனை உயர்த்தி, அவர்கள் யாவரும் அவனை பணிந்து கொள்ளும்படியான பெயரை அவனுக்குக் கொடுத்தார். ஆண்டவர் இயேசுவின் விலை மதிக்க முடியாத இரத்தத்தினாலே மீட்கப்பட்ட சகோதர சகோரிகளே, ஒருவேளை நீங்கள் செய்த குற்றத்திற்காகவோ, செய்யாத குற்றத்திற் காகவோ, அல்லது எக்காரணங்கலுமின்றியோ, உங்களுக்கும் பலர் பற்பல பெயர்கள் சூடி அழைத்திருக்கலாம். அவை நற்பெயராகவோ, அவப்பெயராகவோ, நகைப்புக் குரியதாகவோ இருந்திக்கலாம். நம்முடைய பிதாவாகிய தேவனோ, உங்களுக்கிருந்த பழைய பெயர்கள் யாவையும் குலைத்துப் போட்டு, தம்முடைய குமாரன் வழியாக, தம்முடைய பிள்ளை என்கின்ற அதிஉயர்ந்த பெயரை உங்களுக்கு சூட்டியிருக்கின்றார். இந்த உலகம் ஒருவேளை, உங்களது பழைக காரியங்களை குறித்து பேசிக் கொண்டிருக்கலாம். குப்பைகளை எடுத்து, அவைகளை தங்கள் மனதிலே வைத்து, வாயினாலே அறிக்கையிடுகின்றவர்கள் அவைகளை சேர்த்து வைக்கட்டும். நீங்களோ, தேவனுடைய பரிசுத்த பிள்ளைகளாக நடந்து கொள்ளுங்கள்.

**1 யோவான் 3:1**

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதாவானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்;

**ஜெபம்:** அன்பின் பரலோக தகப்பனே, தாயின் கர்ப்பத்திலே என்னை முன்குறித்து, தகுதியில்லாத என்னை உம்முடைய பிள்ளையாக்கினீர். நான் உம்முடைய பிள்ளையாக வாழ என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | நவம்பர் 19

📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 3:11 – 14

# புதிய வாழ்வை நோக்கி முன்னேறுங்கள்

**2 கொரிந்தியர் 4:16**

எங்கள்புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படுகிறது.

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த மனிதனானவன், அநேக ஆண்டுகளாக மதுபான வெறிகொள்ளுதலுக்கு அடிமையாக இருந்து வந்தான். மிகையாக மதுபானத்தை அருந்தி வெறிகொண்டு, தெருவருகே விழுந்து கிடப்பது அவனுக்கு வழக்கமாக இருந்தது. அதனால், ஊரார் அவனுக்கு குடிகாரன் என்ற பெயரை சூட்டிக்கொண்டார்கள். அவனுடைய வீடு அந்த ஊரிலே எல்லைக் குறிப்பாக மாறிவிட்டது. எடுத்துக் காட்டாக, அந்த குடிகாரனின் வீட்டிற்கு அப்பாலே இருக்கும் கடைக்கு போகின்றேன் என்று ஜனங்கள் கூறிக் கொள்வார்கள். ஒரு நாள், அவன் ஆண்டவராகிய இயேசுவை அறிந்து, தன்னை அவரிடம் முற்று முழுவதுமாய் ஒப்புக் கொடுத்து, அற்புதவிதமாக, மதுபான அடிமைத்தனத்திலிருந்து முற்றாக விடுதலையாக்க ப்பட்டான். அவனுடைய வாழ்வு முற்றாக மாற்றப்பட்டதைக் கண்ட ஊரா ரும் ஆச்சரியப்பட்டார்கள். ஆனாலும், அவனுக்கு வைத்த பெயரை அவர்கள் மாற்றவில்லை. இந்த குடிகாரனும் கடவுளைப்பற்றி பேசுகின் றானா? என்று கூறிக் கொள்வார்கள். ஆரம்பத்திலே அதை குறித்து வேதனைப்பட்ட அந்த மனிதனானவன், ஆண்டுகள் செல்லச் செல்ல, ஆண்டவர் இயேசுவிற்குள் முதிர்ச்சியடையந்து வந்தான். இப்போது, பத்து ஆண்டுகள் கடந்த பின்னர், ஊரிலுள்ளவர்கள் அவனை குடிகாரன் என்று அழைக்கும் போது, அவன் தன் மனதிலே, தனக்கு வெளிப்பட்ட தேவனுடைய மகா பெரிதான கிருபையை நினைத்து அவருக்கு நன்றி சொல்ல ஆரம்பித்தான். ஆண்டுகள் செல்லச் செல்ல, அவன் தான் குடிகாரனாக இருந்த நாளைவிட்டு முன்னேறிக் கொண்டே சென்றான். ஆனால், அவனை குடிகாரன் என்று அழைக்கும் மனிதர்கள் ஆண்டுகள் செல்லச் செல்ல, அவனுடைய பழைய வாழ்க்கையை தங்கள்மனதிலே வைத்திருந்ததால், அவர்கள் பின்நோக்கி சென்று கொண்டே இருந்தார்கள். பிரியமானவர்களே, சில வேளைகளிலே, உங்களுடைய வாழ்க்கையிலும், அநேக வருடங்களுக்கு முன்னதாக நீங்கள் செய்த குற்றத்தை பற்றிக் கொண்ட சிலர், கடந்த காலத்திலேயே வாழ்ந்து வரலாம். அவர்கள் பின்னானவைகளை பற்றிக் கொண்டு பின்நோக்கி செல்கின்றார்கள். நீங்களோ, பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருங்கள்.

**ஜெபம்:** இந்த உலகத்தின் கேட்டிலிருந்து என்னை விடுதலையாக்கிய தேவனே, மாசத்திற்குரிய காரியங்களை என்னைவிட்டு அகற்றி, நீர் தந்த புதிய வாழ்விலே நான் முன்னேறிச் செல்ல எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

📖 மாலை வாசகம் – மத்தேயு 11:28 – 30

# கிறிஸ்துவின் சிந்தை என்னில் உண்டா?

உன்னதத்திலே வாசம் செய்யும் ஆண்டவராகிய இயேசு, தேவனு டைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளை யாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். தம்முடைய பிதாவின் சித்தத்தை நிறைவேற்றி முடிக்கு ம்படி மரணபரியந்தம் வரை கீழ்ப டிந்தவராகி, தம்மைத் தாமே தாழ் த்தினார். இதுவே கிறிஸ்துவின் சிந்தை. இந்த சிந்தையே நம்மில் காணப்படவே ண்டும். கிறிஸ்தவன் என்று தன்னை கூறுகின்றவன் எவ னிடத்திலும், கீழ்படிவும், தாழ்மை யும் காணப்பட வேண்டும். கீழ்ப டிவும், தாழ்மையும் இல்லாமல் ஒருவனும் பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிக்க முடியாது. ஆண்டவராகிய இயேசு தாமே, பிதாவின் சித்தத்தை செய்யும் பாதையில், பல அவமானங்கள், நிந்தைகள், பாடுகள், அநியாயங்களை சகிக்க வேண்டியதாயிருந்தது. அவருடைய நோக்கமெல்லாம், பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வேண்டும் என்றிருந்தால், தனக்கு நேரிட்ட அவமானங்கள், நிந்தைகள், பாடுகள், அநியாயங்களை மனத்தாழ்மையோடும், கீழ்படிவோடும் ஏற் றுக் கொண்டார். ஆனால், இன்றைய நாட்களிலே, சிலர் தங்களை ஞான ஸ்நானத்திற்கு ஒப்புக் கொடுத்த பின்பு, தேவ சித்தத்தை நிறைவேற்ற பூமியிலிருந்து உன்னத்திற்கு ஏறிவிட்டவர்களைப் போல மாறிவிடுகி ன்றார்கள். அவமானங்கள், நிந்தைகள், பாடுகள், அநியாயங்களை சகித்துக் கொள்ள மனதில்லாதவர்களாக காணப்படுகின்றார்கள். தங்கள் சுயசிந்தையே மேன்மையானது என்று எண்ணி விவாதங்களையும் கல கங்களையும் உண்டு பண்ணிவிடுகின்றார்கள். பிரியமானவர்களே, ஆண் டவராகிய இயேசுதாமே "தமக்குமுன் வைத்திருந்த சந்தோ ஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனு டைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ் விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக் கொள்ளுங் கள். பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத் தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்துநிற்கவில்லையே." எனவே, மனத் தாழ்மையை அணிந்து கொள்ளுகள். கீழ்படிவுள்ளவர்ளாக இருங்கள். தேவ சித்தம் நிறைவேற இடங் கொடுங்கள்.

**எபிரெயர் 12:3**

**தமக்கு விரோதமாய்ப் பாவி களால் செய்யப்பட்ட இவ்வி தமான விபரீதங்களைச் சகி த்த அவரையே நினைத்துக் கொள்ளுங்கள்**

**ஜெபம்**: சகலமும் அறிந்த சர்வ வல்லமையுள்ள தேவனே, நீர் ஆளுகை செய்கின்றீர் என்பதை நான் உணர்ந்தவனாக, உம்முடைய சித்தம் என் னில் நிறைவேற்றி முடிக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தரு ள்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | நவம்பர் 21 | 📖 மாலை வாசகம் – லூக்கா 12:15–21

# உலக ஐசுவரியத்தை நாடுகின்றவர்கள் யார்?

இந்த உலகத்தின் ஐசுவரியம் மனிதனுக்கு இரட்சிப்பை கொடுப்பதில்லை என்பதை விசுவாசக் குடும்பத்தார் யாவரும் நன்றாகவே அறிந்திருக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், இவைகளை தேவனை அறியாதவர்கள் நாடித் தேடுகின்றார்கள் என்று மற்றவர்களுக்கும் ஆலோசனையும் கூறுகின்றார்கள். ஆனால், இன்றைய உலகிலே, தேவனை அறிந்தவர்கள் என்று கூறும் சிலர், உலக ஐசுவரியம் தேவனுடைய ஆசீர்வாதம் என்று நம்பி, அதை நாடித் தேடுகின்றார்கள். தங்களிடத்திலே அழிந்து போகும் ஐசுவரியம் பெருகினால், அது தேவனுடைய ஆசீர்வாதம் என்றும், தேவனை அறியாதவர்கள், இந்த உலகத்தின் வழியிலே கடுமையாக உழைத்து, ஐசுவரியத்தை பெருக்கினால் அதை சாபம் என்றும் கருதுகின்றார்கள். ஒரு சமயம் ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார். பிரியமானவர்களே, தேவனுடைய வார்த்தைகளை அற்பமாக எண்ணி அசட்டை செய்யாதிருங்கள். "தங்கள் செல்வத்தை நம்பி தங்கள் திரளான ஐசுவரியத்தினால் பெருமைபாராட்டுகிற, ஒருவனாவது, தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி, எவ்விதத்தினாலாவது அவனை மீட்டுக்கொள்ளவும், அவனிமித்தம் மீட்கும்பொருளை தேவனுக்குக் கொடுக்கவுங்கூடாதே. அவர்கள் ஆத்துமமீட்பு மிகவும் அரிதாயிருக்கின்றது. அது ஒருபோதும் முடியாது. ஞானிகளும் மரித்து, அஞ்ஞானிகளும் நிர்மூடரும் ஏகமாய் அழிந்து, தங்கள் ஆஸ்தியை மற்றவர்களுக்கு வைத்துப்போகிறதைக் காண்கிறான். தங்கள் வீடுகள் நித்தியகாலமாகவும், தங்கள் வாசஸ்தலங்கள் தலைமுறை தலைமுறையாகவும் இருக்குமென்பது அவர்கள் உள்ளத்தின் அபிப்பிராயம் அவர்கள் தங்கள் நாமங்களைத் தங்கள் நிலங்களுக்குத் தரிக்கிறார்கள். ஆகிலும் கனம்பொருந்தியவனாயிருக்கிற மனுஷன் நிலைத்திருக்கிறதில்லை. அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்." (சங்கீதம் 49:6-12) என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. வானமும் பூமியும் அதிலுள்ள யாவும் அழிந்துபோகும். உங்கள் ஆத்துமாவும் அவைகளோடு அழிவை சுதந்திரித்துக் கொள்ளாதபடிக்கு, பரலோகத்தின் மேன்மையானவைகளை பற்றிக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 49:10**

**ஞானிகளும் மரித்து, அஞ்ஞானிகளும் நிர்மூடரும் ஏகமாய் அழிந்து, தங்கள் ஆஸ்தியை மற்றவர்களுக்கு வைத்துப்போகிறதைக் காண்கிறான்.**

**ஜெபம்:** பரலோக மேன்மைகளை தேடுங்கள் என்று கூறிய தேவனே, அழிந்து போகின்ற உலக பொக்கிஷங்களை நாடித் தேடாமல், பரலோகத்திலே எனக்கு பொக்கிஷத்தை சேர்த்து வைக்க வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சிறிதாக தொடங்கும் இச்சைகள்

குறித்த ஊரிலே வசித்து வந்த ஜனங்கள் மத்தியிலே, சிலர் மலைப் பாம்புகளையும் செல்லப் பிராணியாக வளர்ப்பது மக்கள் மத்தியிலே ஒரு பெருமைக்குரிய காரியமாக இருந்து வந்தது. அந்த மலைப் பாம் பானது வளர்ந்து அடைக்கப்பட்டிருக்கும் கூட்டைவிட்டு வெளியேற சந்த ர்ப்பம் கிடைத்த் முதல் நாளிலேயே, பாதகமான காரியங்கள் நடப் பித்ததை அந்த ஊரார் அறிந் திரு ந்தார்கள். இதனால், அந்த ஊரிலே வசித்து வந்த மருத்துவரானவர், இப்படியான மதியீனமான செயல் களை செய்ய வேண்டாம் என்று, ஊர்மக்களுக்குகண்டிப்போடு அறிவுரை வழங்கி வந்தார். ஆண்டு கள் கடந்து சென்ற போது, அந்த மருத்துவரானவருடைய மனைவியான வள் தன் வீட்டிலே, கம்பிகளால் அடைக்கப்பட்ட கூடொன்றிலே ஒரு சிறிய மலைப்பாம்பை வளர்ப் பதை, அந்த ஊரிலே சிலர் கண்டு கொண்டார்கள். அந்த ஊரின் மூப் பர்களிலொருவர், அந்த மருத்துவரை அணுகி, ஐயா, பாம்புகளை செல்லப் பிராணியாக வளர்க்க வேண்டாம் என்று ஊர் மக்களுக்கு எச்சரிப்பை வழங்கி நீங்கள், முன் உதாரணமாக இருக்க வேண்டாமா? என்று தயவாக கேட்டுக் கொண்டார். அதற்கு அந்த மருத்துவரானவர் மறுமொழியாக, நான் ஒரு மருத்துவர், மருத் துவ பரிசோதனைக்காக அதை வளர்க்கின்றேன். அது ஒர சிறிய பாம்பு தான் என்றார். அதற்கு அந்த மூப்பரானவர்: ஐயா, சிறிய பாம்புதான் வளர்ந்து பெரிதாகுமே என்று நீங்கள் அறிவுரை கூறவில்லையா என்று கேட்டார். அதற்கு மருத்துவரானவர்: நீங்கள் என்னையும் ஊர் மக்களை யும்ஒரு மட்டத்தில் வைத்து பேசுகின்றீர்களா? அதை கட்டுப்படுத்தி, ஒழு ங்காக பராமரித்துக் கொள்வது எப்படி என்பதை நான் நன்றாக அறிந்தி ருக்கிறேன் அதனால், அதைக் குறித்து கவலையடைய வேண் டாம் என்று முடிவாக கூறி அவரை அனுப்பிட்டார். பிரியமானவர்களே, இன் றைய நாட்களிலே, தங்களை தேவனுடைய ஊழியர்கள் என்று கூறிக் கொள்ளும் சிலரும், அந்த மருத்துவரைப் போல, பணஆசையைக் குறி த்து ஊருக்கு உபதேசம் கூறிகின்றார்கள். ஆனால், தாங்கள் அதைப் பற்றிக் கொண்டு, அதனால் தங்களுக்கு வேதனை உண்டாகாது என்று கூறிக் கொண்டு, தங்கள் நிலைமையை நியாயப்படுத்துகின்றார்கள். இப் படியான செயல்களை கண்டு, நீங்கள் நிலை தவறிப் போகாதபடிக்கு, கர்த்தருடைய உபதேசத்திலே உறுதியாய் நிலைத்திருங்கள். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர். அந்த இச்சை சிறிதான மலைப் பாம் பைப்போல ஆரம்பித்து, பெரிதாக வளர்ந்து, விசுவாசக் கண்களை குரு டாக்கி, வாழ் விலே அநேக வேதனைகளை உண்டாக்கி விடும்

**1 தீமோத்தேயு 6:10**

பண ஆசை எல்லாத் தீமைக் கும் வேராயிருக்கிறது;

**ஜெபம்**: பரலோக மேன்மைகாக என்னை அழைத்த தேவனே, விசுவா சத்தின் நல்ல போராட்டத்தை போராடவும், போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியுடையவனாகவும் வாழ எனக்கு உணர்வுள்ள இருதய த்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வறுமை மாறி வசதி உண்டாயிற்று

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த இரண்டு நண்பர்கள், தங்கள் சிறு வயதிலிருந்து மிகவும் கஷ்டங்கள் மத்தியிலே வளர்ந்து வந்தார்கள். வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வந்த அவர்கள் இருவரும், தாங்கள் பொருளாதாரத்திலே விருத்தியடைய வேண்டும் என்று கடுமையாக பிரயாசப்பட்டு வந்தார்கள். ஆண்டுகள் கடந்து சென்றதும், அந்த பிரயாசத்தின் பலனாக, கைநிறைய உழைத்து வசதியுடையவர்களானார்கள். அவர்களிலே ஒருவன்: "நான் கஷ்டப்படும் போது, ஊரிலே இருந்த ஒருவன் கூட, மனதிரங்கி எனக்கு ஒரு சரட்டை துண்டாகிலும் கொடுத்ததில்லை. எனவே, நான் இந்த ஊருக்கோ, ஊராருக்கோ, ஒரு சதம் கூட சும்மா கொடுக்க மாட்டேன்" என்று கடுமையாக கூறிக் கொண்டான். மற்றய நண்பனோ: "நானும் கஷ்டப்படும் போது, ஊரிலே இருந்த ஒருவன் கூட, மனதிரங்கி எனக்கு ஒரு சதமும் கொடுத்ததை அறியேன். ஆனால், நான் அவர்களைப்போலல்லாது, இந்த ஊரிலே வறுமை கோட்டிற்குள் வாழும் பிள்ளைகள் வளம் பெறும்படிக்கான சில திட்டங்களை ஆரம்பிக்க உள்ளேன்." என்று கூறிக் கொண்டான். பிரியமானவர்களே, இன்று சிலர், தேவன் என்னை ஆசீர்வதித்து, ஐசுவரியத்தை பெருகப் பண்ணினார் என்று கூறிக் கொள்கின்றார்கள். ஒருவேளை அது உண்மையாக இருந்தால், தேவனானவர் தாமே காரணம் இல்லாமல் காரியங்களை செய்வதில்லை. எனவே, ஐசுவரியம் சம்பந்தமான வேத வார்த்தைகளையும், கர்த்தர் கூறிய உவமைகளையும் வாசித்து, தேவ நீதியை நீங்கள் நிறைவேற்றுங்கள். இருப்பவைகளை பயன்படுத்தி, பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள். பழிக்கு பழி வாங்குவேன் என்ற பிரகாரமாக வாழ்ந்த அந்த முதலாவது நண்பனைப் போல, இறுமாப்படையாமல், சத்துருபசியிாயிருந்தாலும், அவனுக்கு போஜனம் கொடுப்பேன் என்ற மனதுடையவர்களாக வாழுங்கள். "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயு மல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன் உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிற வர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார்."

**2 கொரிந்தியர் 9:9**

**வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும் என்று எழுதியிருக்கிறபடியாகும்.**

**ஜெபம்:** திருப்பதியாக்கி நடத்தும் தேவனே, உம்முடைய ஈவுகளை நான் துஷ;பிரயோகம் செய்யாமல், மனப்பூர்வமாக பகிர்ந்து கொடுக்கும் இரக்கமுள்ள இருதயத்தை அடியேனுக்கு தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கொடுப்பதற்கு ஒன்றுமில்லையே?

நாளாந்தம் உழைப்பதினால் வரும் ஊதியத்தில், தன் வாழ்க்கைய நடத்தி வந்த மனிதனொருவன், மிகவும் எளிமையான வீட்டிலே வாழ்ந்து வந்தான். வீட்டிலே இன்ன பொருள் இருக்கின்றது என்று குறிப்பிட்டு சொல்ல அவனிடம் எதுவும் இருந்ததுமில்லை. மற்றவனுக்கு கொடுப்பத ற்கு அவன் எதையும் சேர்த்து வைக்கக் கூடிய நிலைமையும் அவனிடம் இல்லை. ஒரு நாள் அவன் தன் மதிய ஆகாரத்தை சமைத்து, அதிலி ருந்து இரவுக்குரியதை பிரித்து வைத்து, மதிய ஆகாரத்தை உண் ணும்படி ஆயத்தப்படுத்திய போது, தெருவிலே அந்த வழியாய் சென்ற தரித்திரனொருவன், அவன் வீட்டி ற்கு முன்பாக வந்து பிச்சை கேட் டேன். ஐயா, பசிக்கின்றது, உண்ப தற்கு ஏதாவது கொடுங்கள் என் றான். அந்த மனிதனானவன், மனது ருகி, தான் இரவுக்கு என்று பிரித்து வைத்த ஆகாரத்தை அந்த தரி த்திரனுக்கு கொடுத்து, இப்படி உட்காரந்து சாப்பிடு என்று திண் ணையிலே அவனை இருத்தினான். பிரியமானவர்களே, இந்த உல கிலே, நாம் அறிந்து ஏழைகள் எத்தனையோ பேர் இருக்கின்றார்கள். அவர்கள் இன்றைய நாளிலே உண்ண உணவின்றி, உடுக்க தகுந்த உடையின்றி, தங்குவதற்கு தகுந்த இருப்பிடம் இன்றி வாடும் போது, நாம் திருப்தியாக உண்டு, நன்றாக உடுத்தி, வசதியாக வீட்டில் இருந்து, நம்முடைய எதிர்காலத்திற்கு தேவையானதையும் சேர்த்து வைப்பது சரியாகுமா என்பதை சிந்தித்துப் பாருங்கள். “அல்லாமலும், விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதை யிலும், எங்கள்மேலுள்ள உங்கள் அன்பிலும், மற்றெல்லாக் காரியங்க ளிலும், நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்தத் தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்.” நானும் என் வீட்டாரும் பெருகினால் போதும் என்ற மனநிலையை விட்டுவிட்டு, உங்களிடம் இருப்பதில் பகிர்ந்து கொடுப்ப தைக் குறித்த எண்ணமுள்ளவர்களாயிருங்கள். அரசனுக்கு வரியை கொடுக்காவிட்டால், தண்டப் பணம் செலுத்த வேண்டி வரும். பொது நல சேவைக்கு உதவி செய்யாவிட்டால், ஊர் ஒன்றுகூடலில் எப்படி மற்றவர்களுடைய முகத்தை பார்ப்பது என்ற பிரகாரம் அவனவன் விசனமாயும், கட்டாயமாயுமாய் வறியவர்களுக்கு உதவாமல், மனவிரு ப்பதோடும், உற்சாகத்தோடும் பகிர்ந்து கொடுங்கள்.

**2 கொரிந்தியர் 8:11**

**கொடுக்கவேண்டும் என்கிற விருப்பமுண்டாயிருந்தது போல, உங்களுக்கு உள்ள வைகளில் எடுத்து அதை நிறைவேற்றுதலும் உண்டா வதாக.**

**ஜெபம்**: மேலான அழைப்பை தந்த தேவனே, நான் விசுவாசத்திலும், போதிப்பிலும், அறிவிலும், எல்லாவித ஜாக்கிரதையிலும் மட்டும் பெருகி ன்றவனாக இல்லாமல், தானதர்மங்களிலும் விருத்தியடைய உணர் வைத் தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நீதிமான்கள் யார்?

கர்த்தருடைய நீதிமான்கள் யார்? நீதிமான்களின் செம்மையான வழிகளை குறித்து நாம் அநேக காரியங்களை பேசலாம். நீதிமானுடைய வாய் ஞானத்தை உரைத்து, அவனுடைய நாவு நியாயத்தைப் பேசும். அவனுடைய தேவன் அருளிய வேதம் அவன் இருதயத்தில் இருக்கிறது.இவை யாவும் உண்மையானதும் அருமையானதுமான வார்த்தைகள். கர்த்தருடைய நீதிமான்களின் செயற்பாடுகள் எப்படியாக இருக்க வேண்டும்? அவன் நடைகளில் ஒன்றும் பிசகுவதில்லை. நீதிமானோ இரங்கிக்கொடுக்கிறான். அவன் நித்தம் இரங்கிக் கடன்கொடுக்கிறான். வாரியிறைக்கின்றான், ஏழைக்களுக்கு கொடுக்கின்றான். திக்கற்ற பிள்ளைகளையும், விதவைகளையும் விசாரிக்கின்றான். எனவே, கர்த்தருடைய நீதிமான் என்று தன்னை காண்பித்துக் கொள்ளும் ஊழியனும், விசுவாசியும் இப்படியாக இருக்க வேண்டும். ஆனால், உலக ஐசுவரியத்தை பெருக்கிக் கொண்டு, தனக்கும் தன் சந்ததிக்கும் சேர்த்து வைத்து, அவ்வப் போது, ஊருக்கு ஒரு சில தானதர்மங்களை செய்து, தங்களை மேன் மக்களாக காண்பித்துக் கொண்டு, சுகபோகமாக வாழும் மனிதர்கள், தங்களை தேவனுடையவர்கள் என்று கூறிக்கொண்டால், அவர்கள் ஊழியர்களானாலும், விசுவாசிகளானாலும், அவர்களை குறித்து எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள். நீங்கள் உண்மையான வழியிலே நடந்து, போதுமென்கிற மனதோடு, தேவ பக்தியுள்ளவர்களாக வாழும் போது, "ஒருவன் ஐசுவரியவானாகி, அவன் வீட்டின் மகிமை பெருகும் போது, நீங்கள் பயப்படாதிங்கள்." நான் உத்தமமாய் வாழ்ந்தா லும், நான் கஷ்டப்படுகின்றேனே, அவர்களோ, செழிப்பாய் வாழ்கின் றார்கள் என்று குழப்பமடையாதிருங்கள். "அவன் மரிக்கும்போது ஒன் றும் கொண்டுபோவதில்லை. அவன் மகிமை அவனைப் பின்பற்றிச் செல் வதுமில்லை. அவன் உயிரோடிருக்கையில் தன் ஆத்துமாவை வாழ்த்தினாலும்: நீ உனக்கு நன்மையை நாடினாய் என்று மனுஷர் அவனைப் புகழ்ந்தாலும், அவன் என்றென்றைக்கும் வெளிச்சத்தைக் காணாத தன் பிதாக்களின் சந்ததியைச் சேருவான். கனம் பொருந்தினவனாயிருந்தும் அறிவில்லாத மனுஷன் அழிந்துபோகும் மிருகங்களுக்கு ஒப்பாயிருக்கிறான்." (சங்கீதம் 49:16-20) என்று பரிசுத்த வேதாகத்தில் வாசிக்கின்றோம். தேவனுடைய நீதிமான், இந்த உலக செல்வத்திலே ஏழையாய் இருந்தாலும் ஒருவேளை செழிப்பாக இருந்தாலும், அவன் தேவ நீதியை தன் கிரியைகளால் நிவைவேற்றுகின்றவனாகவே இருக்கின்றான்.

**சங்கீதம் 37:3**

**கர்த்தரை நம்பி நன்மை செய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்து கொள்.**

**ஜெபம்**: பரலோக தேவனே, இந்த உலகத்தில் உண்டாகும் செழிப்பினால் நான் உம்மைவிட்டு தூரம் சென்றுவிடாதபடிக்கு, எப்போதும் உம்முடைய நீதியை நிறைவேற்றுகின்றவனாக வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | நவம்பர் 26

📖 மாலை வாசகம் – யோவான் 6:35

# ஜீவ வார்த்தையில்லாமல் வாழ முடியாது

சிறு பிள்ளைகள், தாங்கள் நினைத்த காரியம் நினைத்ததைப் போல நடைபெறாவிட்டால் அல்லது தாங்கள் பெற்றோரிடம் கேட்டுக் கொண்ட காரியத்தை பெற்றோர் அவர்களுக்கு கொடுக்காவிட்டால் அல்லது பெற்றோர்கள் அவர்களை சிட்சிக்கும்போது, அவர்கள் பெற்றோரோடு கோபித்துக் கொண்டு சாப்பிடாமல் பிடிவாதமாக இருப்பதை நாம் கண்டிருக்கின்றோம். சிறுவர்கள் மாத்திரமல்ல, குடும்பத்தில் ஏற்படும் சில சூழ்நிலைகளினாலே வளர்ந்தவர்களும் இப்படியாக குழந்தைத் தனமாக நடந்து கொள்கின்றார்கள். இது உபவாசம் அல்ல இதை உண்ணாவிரதம் என்று கூறலாம். சில வேளைகளிலே, இந்த உலக வாழ்க்கையிலே, இத்தகைய செயற்பாடுகள் அவர்கள் விரும்புகின்ற காரியங்களை நடப்பிக்கலாம். இதே பிரகாரமாக, சிலர் தங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையையும் அமைத்துக் கொள்கின்றார்கள். அதாவது, தாங்கள் நினைத்த காரிங்கள் தங்கள் இஷ்டப்படி நடக்காமல் போகும் போது, தங்கள் ஆவிக்குரிய ஆகாரமாகிய வேதத்தை தள்ளிப் போடுகின்றார்கள். நான் பரிசுத்த வேதாகமத்தை வாசிக்க மாட்டேன், அந்த ஜீவ வார்த்தைகளை தியானிக்க மாட்டேன் என்று மதியீனமான தீர்மானங்களை தங்கள் வாழ்க்கையிலே எடுத்துக் கொள்கின்றார்கள். இந்த உலகிலே, சரீத்திற்கு தேவையான ஆகாரத்தை உண்ணாமல், அதிகாரங்களுக்கு எதிராக உண்ணாவிரதங்கள் செய்கின்றவர்கள், அதனால் நில பலன்கள் அடைந்து கொள்ளலாம். ஒருவேளை மனிதர்கள் மத்தியிலே நன்மதிப்பை பெற்றுக் கொள்ளலாம். ஆனால், தன் ஆன்மீக வாழ்க்கையை கெடுத்துக் கொள்ளும்படிக்கு, அனுதின ஜீவ உணவாகிய தேவனுடைய வார்த்தையை ஒருவன் தள்ளிவிடுவதால், அவனுக்கு வரும் பலன் என்ன? இப்படிப்பட்டவர்கள், கனியற்ற வாழ்க்கையை வாழ்வதற்கு தங்களை பிடிவாதத்தோடு ஒப்புக் கொடுக்கின்றார்கள். ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலே தேவன் விரும்பும் கனிகள் இல்லை என்றால், அவனிடம் வெளிப்படும் கிரியைகள் என்ன? அது மாம்சத்தின் கிரியைகளாக காணப்படும். தேவ வார்த்தையை தள்ளிவிடுகின்றவன், ஜீவ போஜனத்தை தள்ளிவிடுகின்றான். எனவே, வாழ்வில் ஏற்படும் இக்கட்டான சூழ்நிலைகளில் புத்திமான்களாக நடந்து கொள்வதற்கு, ஜீவ வார்த்தையை இறுகப் பற்றிக் கொண்டிருங்கள்.

**உபாகமம் 8:3**

மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்

**ஜெபம்**: நித்திய ஜீவன் தரும் திருவார்த்தைய எனக்கு தந்த தேவனே, சாதகமற்ற சூழ்நிலைகளிலே, நான் புத்திமான்ளாக நடந்து கொள்ளும்படி, உம்முடைய வார்த்தையை பற்றிக் கொண்டிருக்கும் உள்ளத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | நவம்பர் 27

📖 மாலை வாசகம் – மத்தேயு 11:28

# துன்பங்கள் சூழ்ந்து கொள்ளும் போது

நோய்வாய் பட்டிருக்கும் மனிதனொருவன், ஏதோ காரணத்தினாலே, தான் வைத்தியரிடம் போக மாட்டேன் என்று மிகவும் பிடிவாதமுள்ளவனாக இருந்தான். நான் அங்கு சென்றால், அவர் சொன்னத்தைதான் திரும்ப வும் சொல்லப் போகின்றார். கொடுத்த கசப்பான மாத்திரைகளையே இன்னும் கூட்டிக் கொடுக்கப் போகின்றார் என்று தன் தீர்மானத்தை நியாயப்படுத்திக்கொண்டான். கேட்பதற்கு இது யாதார்த்தமற்றதாக இருக்கலாம், ஆனால் உண்மையிலேயே, சில மனிதர்கள், தங்களுக்கு உண்டான விசுவாசத்தினாலல்ல, வைத்தியரோடு நல்ல உறவு இல்லாததினாலே, அவரிம் செல்ல மாட்டேன் என்று பிடிவாதமாக இருந்து, முடிவிலே மருத்துவ மனைக்கு துரிதமாக கொண்டு செல்லப்படுகின்றார்கள். ஒருவேளை இத்தகைய செயற்பாட்டின் முடிவாக அந்த மனிதனாவன் இந்த உலகத்தைவிட்டு கடந்து செல்ல வேண்டியும் ஏற்படாலம். ஆனால், ஒரு விசுாசியானவன், தன் ஆன்மீக நோயை குணப்படுத்தாமல், பரம வைத்தியராகிய இயேசுவிடம் செல்ல மாட்டேன், அதாவது, அவர் சொன்னத்தை செய்ய மாட்டேன் என்று பிடிவாதமாக இருப்பானாக இருந்தால், அவனுடைய முடிவு என்னவாக இருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள். சரீர நோய்கள் ஏற்படும் போது, சிலர் விசுவாசத்தினால் தெய்வீக சுகம் உண்டாகும் என்று வைத்தியரிடம் செல்லாமல் இருக்கின்றார்கள். அது அவர்களுடைய விசுவாசம் என்று கூறலாம். ஆனால், வாழ்க்கையிலே ஆன்மீக நோய் ஏற்படும் போது, ஒருவன் இயேசு சொன்னத்தை செய்யமாட்டேன் என்று கூறுவானாக இருந்தால், அவன் விசுவாசமற்றவனாக மாறிவிடுகின்றான். "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன்" என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். பிரியமானவர்களே, நம்முடைய வாழ்க்கையிலே உண்டாகும் துன்பங்கள், துயரங்கள், நம்முடைய மீறுதல்களினாலோ அல்லது, மற்றவர்களுடைய மீறுதல்களினாலோ உண்டாகலாம். யார்தான் காரணமாக இருந்தாலும், ஆண்டவர் இயேசு அல்லாமல் ஆறுதல் இல்லை. எனவே, துன்பத்தின் நாட்களிலே ஆராதனைக்கு செல்ல மாட்டேன். ஜெபிக்க மாட்டேன். ஜீவ வனத்தை தியானம் செய்ய மாட்டேன் என்று தேவனைவிட்டு தூரம் சென்று விடாமல், இன்னும் அதிகமாக அவரை கிட்டிச் சேருங்கள்.

**யோவான் 15:5**

**இயேசு சொன்னார்: என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது.**

**ஜெபம்**: துன்பத்தின் பாதையில் நான் நடக்கும் போது என்னை உயிர்பிக்கின்ற தேவனே, வேதனைகளின் நேரங்களிலே நான் உம்மை மறந்து போய்விடாதபடிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

செவ்வாய் | நவம்பர் 28

📖 மாலை வாசகம் – எபேசியர் 6:10 –13

# வாழ்வில் ஏற்படும் சிறிய பிளவுகள்

தன் வீட்டின் பின் புறத்தின் வேலியிலே சிறிய பிளவு ஏற்பட்டிருக்கின்றது என்று அறிந்து கொண்ட வீட்டின் சொந்தக் காரன், சிறு நரி கூட உட்புக முடியாத ஒரு சிறிய பிளவு ஏற்பட்டிருக்கின்றது. அதை பின்பு பார்த்து கொள்வோம் என்று கூறிக் கொண்டான். ஒரு சில கிழமைகளுக்கு பின்னர், ஒரு இரவிலே, அவனுடைய வீட்டின் பிற்புறத்தின் வழியாக சில வனவிலங்கள் உட்புகுந்து, அவன் வைத்திருந்த தோட்டத்தை அழித்து, பெரும் சேதத்தை ஏற்படுத்தி சென்று விட்டன. பின் வேலியில் ஏற்பட்ட சிறிதான பிளவை பாராமுகமாக விட்டதால் வந்த பின்விளைவைப் பாருங்கள். வேலி திறந்திருக்கின்றது, உள்ளே வந்துதோட்டத்தின் காய்கறிகளை சாப்பிடுங்கள் என்று வனவிலங்குகளுக்கு விசேஷித்த அழைப்பிதழ் கொடுக்கத் தேவையில்லை. எங்கே வேலி திறந்திருக்கின்றதோ, அது வனவிலங்குகளுக்கு அழைப்பிதழாகவே இருக்கின்றது. அந்த பிளவுகள் வழி யாக வனவிலங்குகள் உட்புகுந்து விடும். அதுபோலவே, நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையிலும், ஏற்படும் சிறி தான பிளவுகளை நாம் பாராமுகமாக விட்டுவிடும் போது, அவைகளினாலே பெரிதான பின்னடைவுகள் ஏற்படும். உங்கள் வாழ்க்கையில் ஏற்படும் பிளவுகள், எதிராளியானவனாகிய பிசாசானவனிற்கு அழைப்பிதழாக இருக்கின்றது. திருடன் கொல்லவும் அழிக்கவுமேயன்றி வேறறொன்றுக்கும் வரான் என்பதை நாம் நன்கு அறிந்திருக்கின்றோம். அதை அறிந்திருந்தும், நம் வாழ்வை சுற்றியிருக்கும் வேலியாகிய வரையறைகளில் சிறிய பிளவுகளை ஏற்படுத்தும் போது, நம் வாழ்க்கையை கொள்ளையடிக்கும் படிக்கு, திருடனை ஊக்குவிக்கின்றவர்களாக காணப்படுவோம். கர்த்தருடைய பிரமாணங்கள் நம் வாழ்வின் பாதுகாப்பின் வேலியாக இருக்கின்றது. அவைகளின் ஒன்றையாகிலும் நம்மைவிட்டு அகற்றி விடக் கூடாது. அனுதினமும் தேவ வார்த்தைகளை தியானித்து, ஜெபம் செய்யாத விசுவாசியானவன், தன் வாழ்வின் சிறிய பிளவுகள், சத்துருவானவன் உட்புகும் பெரிதான திறப்புக்களாக மாறிவிட இடங்க கொடுக்கின்றான். எனவே, எப்போதும் விழிப்புள்ளவர்களாக இருந்து, வேத பிரமாணங்களின் வழியிலே நம்முடைய வாழ்க்கையை வாழ வேண்டும். வலது புறமாகவோ, இடது புறமாகவோ சாயாமல், ஆண்டவர் இயேசு காட்டிய வழியிலே நாம் கருத்துதோடு வாழ்வதற்கு நம்மை ஒப்புக் கொடுப்போமாக.

**நீதிமொழிகள் 4:23**

**எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்திநின்று ஜீவஊற்று புறப்படும்.**

**ஜெபம்:** நித்திய வாழ்வின் வழியை எனக்கு காண்பித்த தேவனே, உம்முடைய வேதத்தின் மகத்துவங்களை நான் மறந்து போகாமல், நீர் காட்டிய ஜீவ வழியிலே நான் நடக்கும்படிக்கு பிரகாசமுள்ள மனக்கண் களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நிறைவான வேதம்

நூலகத்திற்கு சென்ற மாணவனானவன்,ஒரு புத்தகத்தை வீட்டிற்கு எடுத்துச் சென்றான். மறுநாள் அவன் அதை மறுபடியும் நூலகத்திலே திரும்பவும் கொடுத்துவிட்டான். அதைக் கண்ட அவனுடைய தகப்பனானவர், மகனே, நேற்று மாலைதானே அந்த புத்தகத்தை நீ நூலகத்திலிருந்து பெற்றுக் கொண்டாய், அடுத்த நாளே அதை திரும்பவும் கொடுத்துவிட்டாய் என்று கேட்டார். அதற்கு அவன்: அப்பா, அந்த புத்தகத்திலுள்ள ஒரு சிறிய பகுதி மட்டும்தான்எனக்குத் தேவையாக இருந்தது. அந்தப் புத்தகத்தின் ஆசிரியர், அந்தப் பகுதியை மட்டும் தான் சிறப்பான எழுத்தியிருக்கின்றார். மற்றய பகுதிகளால் அதிக பிரயோஜனம் இல்லை என்று என்னுடைய வகுப்பாசிரியர் கூறினார். எனவே, நான் தேவையானதை கடந்து இரவு கற்றுக் கொண்டடேன் என்று மறுமொழி கூறினான். இன்றைய நாட்களிலே, சில விசுவாசிகள், தேவனுடைய வார்த்தைகளையும் அவ்வண்ணமாகவே எடுத்துக் கொள்கின்றார்கள். எனக்கு தேவையானதை எடுத்துக் கொண்டு, மிகுதியை விட்டு விடலாம் என்று எண்ணிக் கொள் கின்றார்கள். வேறுசிலர், இந்த உலகத்திலுள்ள மற்றய புத்தகங்களின் ஆசிரியர்களை விமர்சிக்கின்றது போல, பரிசுத்த வேதாகமத்தையும் விமர்சிக்கின்றார்கள். வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. (2 தீமோ 3:16) வேதத்திலுள்ள எந்தத் தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறியவேண்டியது. தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (2 பேதுரு 1:20-21). தேவனுடைய வாக்குத்தத்தங்கள் ஒன்றல்ல, எல்லாம் நமக்கு ரியவைகள். அவைகள் யாவும் கிறிஸ்து இயேசுவுக்குள் பரிபூரணமாக அடங்கியிருக்கின்றது. அவைகளில் ஒரு சில வாக்குத்தத்தங்களை எடுத்துக் கொள்வேன். சில பிரமாணங்களை பின்பற்றுவேன். மிகுதியானவைகள் எனக்கு தேவையல்ல என்று தள்ளிவிடுவதற்கு, அவைகளின் ஒன்றும் குறைவானவைகள் அல்ல. அவை யாவும் நம் வாழ்விற்கு கிறிஸ்வின் நிறைவான சாயலிலே விருத்தியடைவதற்கு இன்றியமையாதவைகளாக இருக்கின்றது. தேவனுடைய மனுஷன் தேறின வனாக வும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக அவைகள் நமக்கு அருளப்பட்டிருக்கின்றது.

**2 கொரிந்தியர் 1:20**

**தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசுகிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே.**

**ஜெபம்**: குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கினறதுமான உம்முடைய திவ்விய வார்த்தைகளை தந்த தேவனே, அவைகள் யாவையும் நான் பற்றிக் கொண்டு கிறிஸ்துவின் சாயலில் வளர கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மகிமையுள்ள வாடாத கிரீடம்

ஆகாரத்தை உட்கொள்ள அமர்ந்திருக்கும் சிறுவர்கள், சில வேளை களிலே மற்றவனுடைய கோப்பையிலே என்ன இருக்கின்றது என்று பார்த்துக் கொள்கின்றார்கள். குழந்தைகள் மற்றய குழந்தையிடம் இருப்பது தனக்கும் வேண்டும் என்று பிடிவாதமாக அழுது கொள் வார்கள். ஆனால், அந்தப் பொருளோ, உணவோ தனக்கு ஏன் தேவை என்பதையும், அதனால் தனக்கு உண் டாகும் பிரயோஜனத்தையும், பின்வி ளைவுகளையும் சிந்திப்பதற்கு அக்கு ழந்தைக்கு அறிவு போதாது. கிறிஸ்து வுக்குள் வளர்ந்தவர்களாகிய நாம் குழ ந்தைத்தனமாக நடந்து கொள்ளக்கூ டாது. எப்போதும் மற்றவனுடைய உண வுத் தட்டிலே என்ன இருக்கினறது. என்னுடைய தட்டு இப்படி இரு க்கின்றதே என்று எண்ணிக் கொள்ளாமல், தேவன் நமக்கு கொடுத்த வைகளுக்காக நன்றி செலுத்த வேண்டும். மோசே என்னும் குழந்தை யானது தேவனுடைய சித்தத்தை முன்குறித்த காலத்திலே நிறைவேற் றும்படி பிரத்தியேகமாக பிரித்தெடுக்கப்பட்டது. மோசே வளர்ந்து அறி வடைந்த போது, தேவனுடைய சத்தத்தை கேட்டு, அவருடைய வழியை பின்பற்றினான். நாம் யாவரும் மோசேயல்ல. ஆனால், மோசேயைப் போல நாமும் தேவசித்தத்தை நிறைவேற்ற பிரித்தெடுக்கப்பட்டோம். நாம் யாவரும் பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின் றோம். பிதாவானவர், இயேசு கிறிஸ்துவிடம் இருந்த ஆவியை நமக்கும் கொடுத்திருக்கின்றார். எனவே, நாம் மோசேயைப் போல தேவன் நம க்கு காட்டிய வழியிலே நடக்க கற்றுக் கொள்ள வேண்டும். தன்னுடைய எஜமானனானவனிடத்தில் இரண்டு தாலந்துகளை பெற்றவன், ஐந்து தாலந்துகள் கொடுக்கப்பட்டவனைப் பார்த்து, நொந்து கொள்ளாமல், தனக்கு கொடுக்கப்பட்ட இரண்டு தாலாந்துகளில் உண்மையுள்ளவ னாக இருக்க வேண்டும். எஜமானனானவன் திரும்பி வரும் போது, தன் ஊழியர்களை பார்த்து, உண்மையும் உத்தமமுமனாவர்களே என்று அழைக்க வேண்டும். நம்முடைய பிரதான மேய்ப்பனாகிய இயேசு வெளிப்படும் நாளை எதிர்பார்த்து நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். நம்மிடத்தில் கொடுக்கப்பட்டதை நாம் காத்துக் கொள்ளாமல், நம்மி டத்தில் இல்லாததைக் குறித்து கவலையடைவதில் என்ன பலன்? அவர் வரும் நாளிலே மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளும் படி, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாக, உற்சாகமனதோடு, அவர் ஒப்புவித்த நற்பொருளை கருத்தோடு காத்துக் கொள்வோமாக.

**1 தீமோத்தேயு 6:20**

**ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு,**

**ஜெபம்:** உலகதோற்றத்திற்கு முன் என்னை முன்குறித்த தேவனே, என க்கு கொடுக்கப்பட்டதை நான் கருத்தோடு காத்துக் கொண்டு, உம்முடைய வார்த்தையின் வழியிலே வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.